விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 06 வெள்ளிக்கிழமை (19.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

## தமிழ் மக்களுக்கு நன்மை எனின்
# எந்த எல்லைக்கும் அப்பால் சென்று சேவை புரிய தயார்!
### ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

தமிழ் மக்களுக்கு நன்மை நடக்கும் என்றால் எந்த எல்லைகளுக்கும் அப்பால் சென்று சேவை புரிய தயார் என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

### வளிமண்டலவியல் திணைக்களத்தால்
## 18 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

(கொழும்பு)

அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடிய 18 மாவட்டங்களுக்கு இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட 24

## அயலவர்களுக்கு இடையே வளர்ப்பு நாயால் கைகலப்பு
### 3 பெண்கள் உட்பட நால்வர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

வளர்ப்பு நாயால் அயலவர்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பில் முடிந்ததில் 3 பெண்கள் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 24

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் நின்றால் என்ன நடக்கும்? - விக்கிரமபாகு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி சிங்களத் தலைவர்களுக்கு தமிழ் மக்களின் வாக்குகள் செல்வதை தடுப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளால், சிங்கள பௌத்த பேரினவாதிகளின் சார்பில் நிறுத்தப் 23

## கட்சிக்குள் கருத்து முரண்பாடு சகஜம்
### அமைச்சர் கபீர் ஹாசிம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், தேவையான 24

## பலாலி விமான நிலையத்தை புனரமைக்க பாதுகாப்புத் தரப்பு திடீரென முட்டுக்கட்டை
### இந்தியாவும் கடும் அதிருப்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தை விஸ்தரித்து மீள இயங்க வைக்கும் தீவிர முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து திடீர் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

விமானநிலைய புனரமைப்பு திட்டத்தில் புதிதாக ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையால், இந்த திட்டத்தை முன்னெடுக்கவிருந்த இந்தியாவும் அதிருப்தியில் உள்ளது.

பலாலி விமான நிலையத்தை சிவில் விமான நிலையமாக, சர்வதேச தரத்தில் புனரமைக்கும் திட்டம் கொள்கையளவில் வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான நிதி உதவியை இந்தியா வழங்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதற்கட்டமாக 2ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவில் 23

## சஜித் – ரவிக்கு ரணில் கண்டனம்
### மோதலை தவிர்க்க அறிவுறுத்தல்



24

## விண்ணுக்குச் சென்றது இலங்கையின் செய்மதி இராவணா – 1



03

## இந்தியாவில் நேற்று பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது

(டில்லி)

இந்திய பாராளுமன்றத்துக்கு இரண்டாவது கட்டமாக 12 மாநிலங்களில் உள்ள 95 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நேற்று ஆரம்பமாகியுள்ளது. 23

### தமிழர்களுக்காக குரல் கொடுத்தும்
## பலனில்லாமல் போனது வருத்தமடைய செய்தது
### வவுனியாவில் இந்தியப் பாடகி ஸ்ரீநிதி

(வவுனியா)

இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போது அவர்களுக்காக இந்தியர்கள் குரல்கொடுத்தும் அது சில வேளைகளில் பயனற்று போகின்றபோது கவலை 23



## சிறப்புத் தேவையுடையோருக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும்
### அமைச்சுக்கள் உட்பட 8 திணைக்களங்களுக்கு உயர் நீதிமன்றம் நேற்று கட்டளை

(கொழும்பு)

சிறப்புத் தேவையுடையவர்கள் தமது பணிகளை முன்னெடுப்பதற்கு போதிய வசதிகளை ஏற்படுத்தி வழங்குமாறு 6 அமைச்சுக்கள் உட்பட 8 திணைக்களங்களுக்கு உயர் நீதிமன்றம் நேற்று கட்டளையிட்டது.

திணைக்களங்களுக்கு வருகை தரும் சிறப்புத் தேவையுடைவர்களுக்கு உரிய இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உத்தரவிட்டுள்ள உயர் நீதிமன்றம், அதனைச் செய்யத் தவறும் திணைக்களங்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றின் 24

## வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவு எமக்கு உண்டு!
### அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணிக்குள் பலரது கருத்துக்கள் உள்ள போதிலும் ஐக்கிய தேசிய முன்னணியாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவோம். வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவுடன் பெரும்பான்மை மக்களின் 23



### நிலையான அபிவிருத்திக்கு
## நிவாரணம் அதிகளவில் தேவைப்படும் - மங்கள

(நியூயோர்க்)

2020 -2030 நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு அபிவிருத்தி நிவாரணம் அதிகளவில் தேவைப்படும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அமெரிக்க நியூயோர்க்கில் 23



## குமண தேசிய சரணாலயத்தில்
### சிறுத்தை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

குமண தேசிய சரணாலயத்தில் சிறுத்தை தாக்கியத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

குமண தேசிய சரணாலயத்தின் பாகுரே பகுதியில் நேற்று பிற்பகல் வீதி பராமரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரை 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர எல்லைக்குள்

# வளர்ப்பு நாய்களை வீதியில் விட தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர எல்லைக்குள் வசிக்கும் மக்கள் தமது வீடுகளில் வளர்க்கின்ற நாய்களை பராமரிக்கவேண்டும். மாறாக வீதிகளில் திரிய விட்டால் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு பின்னர் மாநகரசபை பிடிக்கும் என மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் மக்கள் தமது வீடுகளில் வளர்க்கின்ற நாய்களை தமது கட்டுப்பாட்டிற்குள் வளர்ப்பதுடன், வீடுகளில் கட்டிவைத்து வளர்க்குமாறும் இதனை முறையாக ஒழுங்குபடுத்துவதற்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மாநகர மக்களுக்கு கால அவகாசம் வழங்கப்படுகின்றது.

அதன் பின்னர் வீதிகளில் நடமாடித்திரியும் கட்டாக்காலி நாய்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி யாழ் மாநகரசபையினால் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

எனவே மேற்குறித்த தீர்மானத்தை தங்களின் முழுமையான கவனத்திற்கு எடுத்து மாநகரசபையின் ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாநகர மக்களை கேட்டுக்கொள்கின்றேன் என அறிவித்துள்ளார். (ம-3)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு குறித்த நாள்களில் நிமிடங்களில் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-6090)

கிளிநொச்சி – பளை கரந்தாய் பகுதியில்

# அத்துமீறி குடியேறிய மக்களை பொலிஸார் வெளியேற்றியுள்ளனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பளை - கரந்தாய் பகுதியில் அத்துமீறி குடியேறிய மக்களை பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர்.

கரந்தாய் பகுதியில் அத்துமீறிய குடியேற்றத்திற்கு கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று முன்தினம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. இதனையடுத்து நேற்று வியாழக்கிழமை மக்களை அங்கிருந்து பொலிஸார் வெளியேற்றியுள்ளனர்.

கிளிநொச்சி - கரந்தாய் பிரதேசத்தில் தலா ஒரு ஏக்கர் வீதம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் 101 பேருக்கு வழங்கப்பட்ட காணியை தெங்கு அபிவிருத்தி சபை தமது காணி என இது வரை உரிமை கோரி வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தலைமையில் கலந்துரையாடலும் இடம் பெற்றது.

இதன்போது காணி விடயம் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மற்றும் சிபாரிசுகள் தொடர்பாக காணியை உரிமை கோருவதற்கு தெங்கு அபிவிருத்தி சபைக்கு அதிகாரம் இல்லை என்றும் அது மக்களிற்கே வழங்கப்பட வேண்டும் என்பதையும் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த காணி விடயம் குறித்து கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களிலும் பலமுறை பேசப்பட்டபோதிலும் எதுவித முன்னேற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.

அத்தோடு யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னரும் இந்த விடயம் இழுபறி நிலையில் இருந்து வந்தமையினால், மக்கள் தமக்கு சொந்தமானதென உரிமை கோரும் காணியில் கடந்த செவ்வாய்க்கிழமை அத்துமீறி குடியேறியிருந்தனர்.

இதனையடுத்து பளை - கரந்தாய் பகுதியில் அத்துமீறிய குடியேற்றத்திற்கு கிளிநொச்சி நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

அத்துடன், காணி உரிமம் உள்ளோரை ஆவணங்களுடன் எதிர்வரும் 30ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மோட்டார் சைக்கிள் விபத்து; இளைஞன் பலி

## இரத்தினபுரியில் சம்பவம்

(இரத்தினபுரி)

பாணந்துறை - இரத்தினபுரி வீதியின் மானான பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் இங்கிரிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். பாணந்துறை பகுதியை சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மற்றுமொரு நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-3)

கொழும்பு மாகோ சந்தியில்

# 5 கிலோ ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது

(கொழும்பு)

5 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்று கொண்டிருந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் கிரிபத்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகோல வை சந்திப் பிரதேசத்தில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய சமரவீர ஆரச்சிகே ஜீவன் பெரேரா என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள தெமட்டகொட சுத்தா என்ற போதைப் பொருள் வர்த்தகரினால் இயக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதை தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளார். (ம-3)

A/L படிக்க முடியவில்லையா?
கவலை வேண்டாம்.
விற்பனைத்துறையில் ஆர்வம் உள்ளவரா?
எம்முடன் இணைந்திடுங்கள்.
இல.303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(6162)

யாழ் வலயக்கல்விப் பணிப்பாளராக

# சந்திரராஜா நேற்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக எஸ்.சந்திரராஜா நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எஸ்.சந்திரராஜாவை யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இனிச்ச புளியடி முருகனுக்கு இன்று தீர்த்தத்திருவிழா

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் ஆலய வருடாந்தத் தீர்த்தத் திருவிழா இன்று இடம்பெறும்.

ஒன்பது நாள் மஹோற்சவம் இடம்பெற்று இன்று பத்தாவது நாள் காலை தீர்த்த உற்சவமும் இரவு கொடி இறக்க நிகழ்வும் இடம்பெறும். (ம)

# துப்பாக்கியுடன் மூவர் கைது

(மொனராகல)

மொனராகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சியம்பலாண்டுவ மற்றும் மெதகம பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மூன்று துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சியம்பலாண்டுவ, பஹலயாய பகுதியில் ஒரு துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவரும்,தொம்கஹவெல பகுதியில் ஒரு துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3)

அகவை 60 இல் வாழ்த்துகின்றோம்



திரு. E.F.R.ஜெயக்குமார்
யாழ்ப்பாண கல்வி வலயத்தில் கணித பாட ஆசிரிய ஆலோசகராக 11.01.2014 ஆம் ஆண்டு முதல் 18.04.2019ஆம் ஆண்டு வரை சிறப்பாகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.E.F.R.ஜெயக்குமார் அவர்கள் ஓய்வுக்காலத்தில் தம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.




கல்வி அபிவிருத்திப்பிரிவு,
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.
(8511)

வவுனியாவில் உள்ள சிறு குளங்களில்

# ஆறு இலட்சத்து 42 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறு குளங்களிற்கு ஆறு இலட்சத்து 42ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட நீர் உயிரின வளர்ப்பு அதிகாரசபையின் பொறுப்பதிகாரி யோ.நிசாந்தன் தெரிவித்தார்.



வவுனியாவில் உள்ள குளங்களுக்கு மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதா என நேற்று வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தவருடம் முதல் இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்கள் வரை வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறு குளங்களில் குறித்த மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. இவை வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறிய குளங்களிற்கே குறித்த மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதுடன் அவற்றில் 46 குளங்களிற்கு நீர் உயிரின வளர்ப்பு அதிகாரசபையினது நிதியும் ஒரு குளத்திற்கு மீனவ சங்கத்தினது நிதி உதவியில் கொள்வனவு செய்யப்பட்டு குளங்களில் விடப்பட்டுள்ளன. 16 இலட்சம் ரூபாய் செலவில் விடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றை பிழையாக வழிநடத்தி பட்ஜெட்டை நிறைவேற்றியது ஐ.தே.க.!

## சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக பந்துல சபாநாயகருக்கு கடிதம்

(கொழும்பு)

**பாராளுமன்றத்தை பிழையாக வழிநடத்தி வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. இதுதொடர்பாக பாராளுமன்றத்தில் எடுத்துரைக்கும் போது அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இடையூறுகளை ஏற்படுத்தியதன் மூலம் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார்.**



இது தொடர்பாக சபாநாயகர் கருஜெயசூரியவுக்கு நேற்று எழுத்து மூலமான முறைப்பாட்டை கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே பந்துல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்துக்கு பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்தே முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பிக்கப்பட்டு 4 தினங்களுக்குள் நிதிக்குழுவின் அறிக்கையைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் சிறப்புரிமைச் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்கவின் நடவடிக்கை சிறப்புரிமையை மீறும் செயலாகும். அதனால் இது தொடர்பாக பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு தெரியப்படுத்தவும் அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்துக்கு அறிவிக்கவும் இருப்பதால். சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பாக பாராளுமன்றத்தில் தெரிவிக்க அனுமதிக்குமாறு தெரிவித்து முறைப்பாட்டுக் கடிதத்தை கையளித்தேன் எனப் பந்துல தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவுக்கு அஞ்சாத ஐக்கிய தேசியக்கட்சி!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் நடந்து முடிந்தால், அதனை நடத்தும் அதிகாரம் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண தெரிவித்துள்ளார்.

அத்துடன் உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமாயின் அதனை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கம்பஹா கிரிந்திவெல மில்லதே பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அவர் குறித்து எந்தப் பயமும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின் அவர் தனது இரட்டைக் குடியுரிமையைச் சட்டரீதியாக இரத்துச் செய்ய வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சம்பந்தமாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தீர்மானிப்பார்கள்.

ஜனாதிபதி வேட்பாளர் கட்டாயம் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சிறந்தது எனவும் ஹர்சன ராஜகருண தெரிவித்தார். (இ-7)

# O/L பெறுபேற்று வீதத்தை அதிகரிக்க வடமாகாணத்தில் விசேட திட்டங்கள்

## கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தகவல்



இந்த வருடம் (2019) இடம்பெறும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வடமாகாணத்தில் 75 வீதமான சித்தி அதிகரிப்பைப் பெற மே மாதம் முதல் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 12 வலயங்களிலும் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கடந்த மூன்று வருடங்கள் பெற்ற அதிகரிப்பு முறையே (2016) 60 வீதமாகவும் (2017) 66 வீதமாகவும் (2018) 70 வீதமாகவும் உள்ளன.

இந்நிலையில் 2019 இல் 75 வீதமாக அதிகரிப்பை எட்டும் நோக்கில் தரம் 10 மூன்றாம் தவணை தரம் 11 முதலாம் தவணைகளில் பாட ரீதியாகப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புக்களும் செயன்முறை விளக்கங்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இத் திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்குப் பன்னிரண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இராவணா - 1 விண்ணுக்குச் சென்றது





(வோஷிங்டன்)

வரலாற்றில் முதன் முறையாக இலங்கையின் பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட இராவணா-1 செய்மதி நேற்று அதிகாலை 2.16 மணிக்கு அமெரிக்காவிலிருந்து, சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் - வெர்ஜினியா பிராந்தியத்திலிருந்து நாசா விண்வெளி நிறுவனத்தின் ரொக்கெட் மூலம், புவியிலிருந்து சுமார் 400 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சர்வதேச விண்வெளி மையத்திற்கு குறித்த செய்மதி கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஜப்பானின் கியூஷூ பல்கலைக் கழகத்தின் பர்டிஸ் என்ற விசேட திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ள ஆயிரம் கனசென்ரிமீற்றர் நீளமுடைய இராவணா - 1 செய்மதியானது, 1.1 கிலோ கிராம் நிறைகொண்டதாகும்.


இந்தச் செய்மதியானது, சர்வதேச விண்வெளி மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னர், எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதமளவில் அது விண்ணில் நிலைநிறுத்தப்படவுள்ளது.

இந்தச் செய்மதி விண்ணில் நிலைநிறுத்தப்பட்ட பின்னர், நாளொன்றுக்கு 15 தடவைகள் பூமியை சுற்றி வலம்வரவுள்ளது. இந்தச் செய்மதியின் வேகம் விநாடிக்கு 7.6 கிலோமீற்றராகும்.

குறித்த செய்மதி விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் பின்னர், இலங்கையையும், அதனைச் சூழவுள்ள வலையத்தையும் நிழற்படம் எடுத்தல் உள்ளிட்ட 5 செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கை மக்களுக்கு தொடர்ந்தும் ஆதரவு

## ஐ.நா. பொதுச் செயலாளர்



(ஜெனிவா)

நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்திச் செயற்பாடுகளில் இலங்கை மக்களுக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்குவோம் என ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் நிதி அமைச்சர் மங்கள சமர வீரவுடனான சந்திப்பின்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளதாக தனது டுவிட்டர் பக்கத்தில் மங்கள தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சாகர் 'சுழல் ஜாலம்' டில்லியை வென்றது மும்பை



19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டை கைப்பற்றிய மும்பையின் சாகர்

கைகொடுக்க டில்லி அணியை 40 ஓட்டங்களால் வெற்றி கொண்டது மும்பை அணி.

இந்தியாவில், 12ஆவது ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. டில்லியில் உள்ள பெரோஷா கோட்லா மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் டில்லி, மும்பை அணிகள் மோதின.

மும்பை அணியில் இஷான் கிஷான், ஜேசன் பெஹ்ரன்டர்ப் நீக்கப்பட்டு பென் கட்டிங், ஜெயந்த் யாதவ் சேர்க்கப்பட்டனர். டில்லி அணியில் மாற்றம் செய்யப்படவில்லை. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ரோகித் சர்மா துடுப்பாட் டத்தை தேர்வு செய்தார்.

**நல்ல ஆரம்பம்**

மும்பை அணிக்கு ரோகித் சர்மா, குயின்ரன் டி கொக் ஆரம்பம் கொடுத்தனர். முதல் ஓவரை கட்டுக்கோப்பாக வீசிய இஷாந்த் சர்மா, 5 ஓட்டங்கள் மட்டுமே வழங்கினார். ரபாடா வீசிய 2வது ஓவரில் ஒரு பவுண்டரி அடித்தார் ரோகித். மீண்டும் துல்லியமாக பந்துவீசிய இஷாந்த், 3ஆவது ஓவரில் 4 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்தார். மறுமுனையில் எழுச்சி கண்ட குயின்ரன், கிறிஸ் மோரிஸ் வீசிய 4வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். கீமோ போல் வீசிய 6வது ஓவரில் இருவரும் தலா ஒரு சிக்சர் அடிக்க, 16 ஓட்டங்கள் கிடைத்தது. 'பவர் பிளே' ஓவரின் (முதல் 6 ஓவர்) முடிவில் மும்பை அணி விக்கெட் இழப்பின்றி 57 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**குயின்ரன் ஆறுதல்**

இந்நிலையில், ஆட்டத்தின் 7வது ஓவரை விசிய அமித் மிஸ்ரா திருப்பம் தந்தார். இவரது 'சுழலில்' ரோகித் (30) போல்டானார். அடுத்து வந்த பென் கட்டிங் (2), அக்சர் படேல் பந்தில் அவுட்டானார். தேவையில்லாமல் ஒரு ஓட்டத்துக்கு ஓடிய குயின்ரன் (35) 'ரன் அவுட்' ஆனார். நிதானமாக ஆடிய சூர்யகுமார் யாதவ், அமித் மிஸ்ரா, ரபாடா பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்தார். இவர், 26 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ரபாடா 'வேகத்தில்' வெளி யேறினார்.

**பாண்ட்யா நம்பிக்கை**

கீமோ போல், மோரிஸ் வீசிய 18, 19ஆவது ஓவரில் தலா ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ஹர்திக் பாண்ட்யா (32) ரபாடா 'வேகத்ததில்' வெளியேறினார். மறுமுனையில் அசத்திய குர்னால் பாண்ட்யா, ரபாடா வீசிய கடைசி ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்தார்.

20 ஓவர்களில் மும்பை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை எடுத்தது. குர்னால் (37) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் ரபாடா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனையடுத்து, 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் மும்பை அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டெல்லி அணியில் அதிகபட்சமாக தவான் 35 (22 பந்து), அக்ஷர் பட்டேல் 26 (23 பந்து) ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில் மும்பை அணி சார்பில் சிறப்பாக பந்து வீசிய ராகுல் சாஹார் 3, ஜஸ்பிரித் பும்ரா 2, குருணல் பாண்டியா, மலிங்க, ஹர்திக் பாண்டியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் ஹர்திக் பாண்ட்யா தெரிவானார்.







# ஆஸி.,க்கு முதல் கிண்ணம்



**தெரியுமா**

1987ல்நாக்பூரில்,நடந்த நியூசிலாந்துக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் 88 பந்துகளில் 103 ஓட்டங்கள் (10 பவுண்டரி, ஒரு சிக்சர்) விளாசிய கவாஸ்கர், இந்திய அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தார். இது தான், ஒருநாள் போட்டிகளில் இவர் அடித்த ஒரே சதம்.

நான்காவது உலகக் கிண்ணத் தொடர் 1987ல் இந்தியா, பாகிஸ்தானில் நடந்தது. மொத்தம் 8 அணிகள் பங்கேற்றன. ஓவர்களின் எண்ணிக்கை 60ல் இருந்து 50 ஆக குறைக்கப்பட்டன. இத்தொடரில் 'திரில்' வெற்றிகளுக்கு பஞ்சமில்லை.

சென்னையில் நடந்த லீக் போட்டியில் இந்திய அணி, அவஸ்திரேலியாவிடம் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வீழ்ந்தது. மும்பையில் நடந்த இரண்டாவது அரையிறுதியில் இந்திய அணி, இங்கிலாந்தை சந்தித்தது. மனிந்தர் சிங் உள்ளிட்ட இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை தனது 'ஸ்வீப் ஷொட்' மூலம் சிதறடித்த கிரகாம் கூச் (115 ஓட்.,) சதம் கடந்தார். மறுமுனையில் மைக் கேட்டிங் (56) அரைச்சதமடிக்க இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களை எடுத்தது.

பின் களமிறங்கிய இந்திய அணிக்கு அசார் (64) கைகொடுக்க, ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்கள் எடுத்து வலுவாக இருந்தது. பின், கடைசி 5 விக்கெட்டுக்களைவெறும்15ஓட்டங்களுக்கு இழந்தது.

இறுதியில் இந்திய அணி 45.3 ஓவர்களில் 219 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும்பறிகொடுத்துதோல்வியடைந்தது. இதனையடுத்து இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் பூன் (75), கைகொடுக்க 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணியின் கிரகாம் கூச் (35), பில் (58), கேட்டிங் (41), லாம்ப் (45) ஆகியோரது போராட்டம் வீணானது. இங்கிலாந்து அணி 50 ஓவரில், 8 விக்கெட்டுக்கு 246 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

பதற்றப்படாமல் ஆடிய அலன் போர்டர் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, முதன்முறையாக உலககிண்ணத்தை வென்றது.

# மலிங்க 'இணைப்பு' இலங்கை 'அறிவிப்பு'



உலக கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட இலங்கை அணியில் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க இடம்பிடித்துள்ளார்.

இங்கிலாந்தில், வரும் மே 30ல் ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. இதில் 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன. இத்தொடருக்கான 15 பேர் கொண்ட வீரர்கள் பட்டியலை இலங்கை கிரிக்கெட் சபை (எஸ்.எல்.சி.) அறிவித்தது. இதில், சமீபத்தில் அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட வேகப்பந்துவீச்சாளர் லசித் மலிங்க தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 4 ஆண்டுகளுக்கு பின் 'சகல துறை வீரர்' ஜீவன் மெண்டிஸ் (வயது-35), இடம் பிடித்துள்ளார். இவர், கடைசியாக 2015ல் டுனிடினில் நடந்த ஆப்கானிஸ்தானுக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் விளையாடினார். இதேபோல 2 ஆண்டுகளுக்கு பின் சுழற்பந்து வீச்சாளர் ஜெப்ரி வொன்டர்சே வாய்ப்பு பெற்றுள்ளார்.

அணித் தலைவராக திமுத் கருணாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

**இலங்கை அணி:** திமுத் கருணாரத்ன (அணித் தலைவர்), லசித் மலிங்க, அஞ்சலோ மத்யூஸ், திசர பெரேரா, குசால் ஜனித் பெரேரா, தனஞ்செய டி சில்வா, குசல் மெண்டிஸ், இசுரு உதான, மிலிந்த ஸ்ரீவர்தன, அவிஷ்க பெர்ணான்டோ, ஜீவன் மெண்டிஸ், லகிரு திரிமான்னே, ஜெப்ரி வொன்டர்சே, நுவான் பிரதீப், சுரங்க லக்மல்.

# தெ.ஆ., அணியில் அம்லா

உலக கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட தென்னாபிரிக்க அணியில் அம்லா சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் வரும் மே 30ல் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. இதில் பங்கேற்கும் தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. மோசமான போர்ம் காரணமாக அணியில் இடம்பெற மாட்டார் என நம்பப்பட்ட அம்லா, 'உலக' அணியில் இடம் பெற்றார். டு பிளசி தலைவராக உள்ள இந்த அணியில் குயின்டன் டி கொக் மட்டும் விக்கெட் காப்பாளராக உள்ளார். ஒருவேளை இவருக்கு காயம் எனில் மில்லர் பொறுப்பேற்பார்.

இதற்காகத்தான் சமீபத்திய இலங்கை தொடரில் மில்லர், விக்கெட் காப்பாளராக செயற்பட்டு பயிற்சி எடுத்துள்ளார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 'சகலதுறை வீரர்' கிறிஸ் மோரிஸ் சேர்க்கப்படவில்லை. இந்தியாவில் நடந்த 2011 தொடரில் அறிமுகம் ஆன டு பிளசி, டுமினி, அம்லா, ஸ்ரெய்ன், இம்ரான் தாகிர் என 5 வீரர்கள் தற்போது மூன்றாவது உலகக் *கிண்ணத் தொடரில் களமிறங்குகின்றனர்.

மில்லர், குயின்ரன் டிகொக் இரண்டாவது தொடரில் பங்கேற்க உள்ளனர். அறிமுக போட்டியில் சதம் அடித்த ரீஜா ஹென்ரிக்சிற்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

**அணி விபரம்**

டு பிளசி (அணித் தலைவர்), டுமினி, மில்லர், ஸ்ரெய்ன், பெலுக்வாயோ, இம்ரான் தாகிர், ரபாடா, பிரிட்டோரியஸ், குயின்ரன் டி கொக், நார்ட்ஜே, லுங்கிடி, மார்க்ரம், வான் டர் டுசென், அம்லா, ஷம்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநகர சபையில் கைவிசேஷம்



(யாழ்ப்பாணம்)

மலர்ந்திருக்கும் தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.மாநகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நேற்று முன்தினம் காலை சுப வேளையில் கைவிசேஷம் வழங்கும் நிகழ்வு மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர், பிரதம பொறியியலாளர், பிரதம கணக்காளர், திணைக்களத் தலைவர்கள், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், முதல்வரின் கரங்களால் கைவிசேஷத்தையும் பெற்றுக் கொண்டனர். (இ-7)

## புங்குடுதீவு கலைப்பெருமன்ற 2 ஆவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்க கலைப் பெருமன்றத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அம்பலவாணர் கலையரங்கில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் (கொழும்பு) மா.லிங்கநாதன், சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலக எஸ்.எஸ்.ஓ.திருமதி அ.அருந்தவராசா, வேலணைப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசன், கௌரவ விருந்தினர்களாக சிவா நறுமணப் பூங்கா உரிமையாளர் து.குருநாதசிவம், நியூரங்கனாஸ் ஹோம் பில்டேர்ஸ் லிமிற் செயலாளர், தர்மினி பத்மநாதன், ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபர் சீ.கமலவேந்தன், வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான க.நாவலன், த.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## சித்திரைப் பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த சித்திரைப் பௌர்ணமி திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

எனவே இன்று காலை 8.30 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகில் மக்களை ஒன்று கூடுமாறு வயாவிளான் சமூக அமைப்புக் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-10)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 09 1981



இறப்பு 19 04 2013

அமரர் மகாதேவன் சதீஸ்குமார் (லண்டன்)

*ஆறு ஆண்டுகள் கடந்து சென்றதடா எம் செல்வமே*
*உனை இழந்து துடிப்பது உன் காதில் விழவில்லையோ?*
*ஓடி வருவாயோ எம் விழி நீரைத் துடைப்பதற்கு*

தொண்டைமானாறு. (சி-6161) குடும்பத்தினர்.



## கட்டடம் வாடகைக்கு கோரல்/ குத்தகைக்கு கோரல்

வடக்கு மாகாண கால்நடை வைத்தியசாலையினை இயக்குவதற்கும் கால்நடைகளுக்கான வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்வதற்கும் பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டடமும் காணியும் வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்க விரும்புபவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

**வசதிகள் மற்றும் நிபந்தனைகள்**

01. கால்நடைகளுக்கும் செல்லப்பிராணிகளுக்கும் வைத்திய சிகிச்சை மேற்கொள்ளக்கூடிய வகையில் குறைந்தது 1600 சதுர அடிகள் கொண்ட (நான்கு அறைகள் 14X12) கட்டடமும் வாகன தரிப்பிடத்திற்கு 1000 சதுர அடிகள் வரையான நிலப்பகுதியையும் கொண்டிருக்க வேண்டும்.
02. யாழ்.காங்கேசன்துறை வீதியில் கொக்குவிலுக்கும் இணுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் பிராதான வீதியில் அல்லது அண்மித்த பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். (போக்குவரத்து மார்க்கங்கள் அண்மித்த கட்டடம் விரும்பப்படும்).
03. மின்சார வசதி (3Phase), நீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
04. குறைந்தது 02 வருடங்களுக்கு ஒரு தடவை புதுப்பிக்கக் கூடிய வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
05. முற்பணம் வழங்கப்படமாட்டாது.
06. மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வழங்கப்படும்.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணபத்தில் வீட்டு உரிமையாளரின் முழுப்பெயர், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை தொகை ஆகிய விபரங்களுடன் ஏனைய தகவல்களையும் உள்ளடக்கி தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் கட்டடம் வாடகைக்கு/ குத்தகைக்கு என குறிப்பிட்டு பிரதிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ்.மாவட்டம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு 05.05.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (சி-6160)

பிரதிப்பணிப்பாளர்,
கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்,
யாழ்.மாவட்டம். 021 222 2387



## தமிழ்த் தாய் மன்றம்-DASCO அமைப்புடன் இணைந்து நடாத்தும் 8 ஆவது இலவச மருத்துவ முகாம்

இடம் : மண்டைதீவு மகா வித்தியாலயம்
காலம் : 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8 மணி முதல் 12 மணிவரை

**பிரதம விருந்தினர்**
Dr.ஆறுமுகம் திருநாவுக்கரசு
(ஓய்வுநிலை வைத்திய பொறுப்பதிகாரி)

**சிறப்பு விருந்தினர்**
வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி
(பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

**கௌரவ விருந்தினர்**
திரு. செல்லையா சிவா
(அல்லையூர் இணையம், பிரான்ஸ்)

மேற்படி இலவச மருத்துவ முகாமில் கண் பரிசோதனையும் இடம்பெற்று இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும்.

அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



பழைமை வாய்ந்த
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


## இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது நிதானம் தேவை.

**மேடம்:** பொன்னான நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**இடபம்:** உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய திட்டங்கள் கைகூடும், அலுவலகப் பணிகள் துரிதமாகும்.

| | | | |
|---|---|---|---|
| புத சுக் | சூரி | செவ் | ராகு |
| | **இராசி பலன்** கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் உத்திரட்டாதி, ரேவதி | | |
| சனி, குரு, கேது | | சந் | |

**19.04.2019**
சித்திரை 06, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பூரணை பிற்பகல் 5.24 மணிவரை
சித்திரை முன்னிரவு 8.12 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சித்திரைச் சித்திரை, சித்திர குப்தவிரதம்,
சித்திரா பௌர்ணமி விரதம்,
பெரிய வெள்ளி.
வளவன்

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கௌரவமான நாள்.

**மகரம்:** ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**சிம்மம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கன்னி:** தொழில் ரீதியாக முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை நகரசபையின் மக்கள் பங்களிப்புடனான செயற்றிட்ட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித்திட்ட செயற்றிட்டமானது பருத்தித்துறை நகரசபையினரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் 02ஆம் வட்டார மக்களுக்கான கலந்துரையாடல் 20ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை நகர மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்திலும், 6ஆம் வட்டார மக்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 3.30 மணிக்கு தும்பளை மேற்கு சனசமூக நிலையத்திலும் 8ஆம் வட்டார மக்களுக்கான கலந்துரையாடல் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விநாயகர் முதலியார் வீதியில் அமைந்துள்ள ஞானாலயம் மண்டபத்திலும், அன்றைய தினம் 07 ஆம் வட்டார மக்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு மாதனை சனசமூக நிலையத்திலும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை 4ஆம் வட்டார மக்களுக்கான கலந்துரையாடல் முற்பகல் 10.30 மணியளவில் 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ராஜா ராணிசேவை நிலையத்திலும், அன்றைய தினம் 9 ஆம் வட்டார மக்களுக்கான கலந்துரை யாடல் பிற்பகல் 4 மணியளவில் ஆத்தியடி பிள்ளையார் கோவில் மண்டபத்திலும் முதலாம் வட்டார மக்களுடனான கலந்துரையாடல் 23 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு சுப்பர் மடம் பொதுநோக்கு மண்ட பத்திலும் இடம்பெறவுள்ளதாக பருத்தித்துறை நகர சபை செயலாளர் அறிவித்துள்ளார். (5)

# அமரர் சபாபதியின் நூற்றாண்டு நினைவு மலர் வெளியீடு 21 ம் திகதி

(யாழ்ப்பாணம்)

அமரர் சபாபதியின் நூற்றாண்டு நினைவு மலர் வெளியீடு நாளை மறுதினம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கோண்டாவில் நெட்டிலிப்பாய் விநாயகர் ஆலய திருமறை மண்டபத்தில் முன்னாள் கொக்குவில் கிராமசபை உப தலைவர் , இலங்கை தமிழரசுக் கட்சிப் பொருளாளர், பெ. கனக சபாபதி (ஜே.பி) தலைமையில் நடை பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதி ராசா, சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தா. தியாகமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# யோகாசன-தியான கற்கைநெறி புதிய பிரிவு நல்லூரில் ஆரம்பம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாசன- தியான கற்கை நெறியின் புதிய பிரிவு நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலில் அமைந்துள்ள நல்லூர் ஆறுமுக நாவலர்மணிமண்டபத்தில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

வார இறுதி நாட்களில் மட்டும் நடைபெறும் இவ்வகுப்புகள் ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்படும். ஆண்களுக்கான பிரிவு சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30-7.30 மணிவரையிலும் பெண்களுக்கான பிரிவு அதே தினங்களில் காலை 7.30-8.30 மணி வரையிலும் நடைபெறுவதுடன் நோயாளர்களுக்கு சிறப்புக் கவனமெடுத்தும் பயிற்றுவிக்கப்படும்.

சுமார் மூன்று மாதங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

எனவே முற்றிலும் இலவசமாக நடைபெறும் இக்கற்கை நெறியில் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும் எனவும் இணைய விரும்புவோர் தமது பதிவுகளை நல்லூர் ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கற்கைநெறி ஆரம்பமாகும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்போ மேற்கொள்ள முடியும் எனவும் மேலதிக விபரங்களை மேற்படி மண்டபத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-102)

# நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்.மாநகரசபை சைவ சமய விவகாரக்குழுவின் 2019 ஆம் ஆண்டுக்கான நல்லைக்குமரன் 27 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்களை அனுப்பும்போது பின்வருவனவற்றை கருத்தில் கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

1. இடது பக்க மேல் மூலையில் நல்லைக் குமரன் மலர் 27 எனக் குறிப்பிட வேண்டும்.

2. கட்டுரைகள் 5-7 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும்.

3.ஏற்கனவே நல்லைக் குமரன் மலரில் வெளிவந்த கட்டுரைகள், வேறு புத்தகங்களில் வெளிவந்த ஆக்கங்கள் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

4. முடிவுத் திகதி : 15.06.2019

5. ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி : தலைவர், சைவசமய் விவகாரக்குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம்.

6. மின்னஞ்சல் முகவரி: saivasamayavivah aram@g mail.com

7. ஆக்கங்களை மின்னஞ்சல் மூலம் / இறுவெட்டுக்கள் மூலம் அனுப்புவது பெரிதும் வரவேற்கப்படுகின்றது.

8. தங்களது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடத் தவற வேண்டாம் என யாழ். மாநகர சபை ஆணையாளரும் சைவசமய விவகாரக்குழுத் தலைவருமான இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ-5)




# இரத்ததான சவாலுக்கு முகநூலூடாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குருதி வகைகளுக்கான தட்டுப்பாட்டையடுத்து அதனை நிவர்த்தி செய்ய முகநூலூடாக இரத்ததான சவாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் யாழ் .போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் தன்னார்வமாக வருகை தந்து இரத்ததானம் செய்யுமாறே சவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான சவால் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற குருதித் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# தொண்டராசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் தொண்டராசிரியர்களுக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேர்முகப் பரீட்சை நடை பெறவுள்ளது.

இந் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள தொண்டராசிரியர்களது பெயர், விபரங்களை np.gov.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் என வடக்கு மாகாணக் க்ல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அறியத்தந்துள்ளார். (இ-5)



# நீர் வெளியேற மதகுகள் அமைப்பு

சாவகச்சேரி மறவன்புலவு வண்ணாத்திக் குளத்திலிருந்து நீர் வெளியேறக் கூடிய வகையில் இரு இடங்களில் மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. பொன்னம்பலம் வீதியில் இரட்டைப் போக்குக் குழாயும் மணற்காட்டு வீதிக்கு ஒரு கண் குழாயும் இவ்வாறு அமைக்கப்பட்டன.

சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் அ.நிமலகரினின் முயற்சியால் தென்மராட்சிப் பிரதேச செயலாளரால் அனர்த்த முகாமைத்துவத் திணைக்களத்திடமிருந்து பெற்ற 2 இலட்சம் ரூபாய் நிதியிலிருந்து இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (இ-10-114)

# தேனீ வளர்ப்பாளர்களை ஊக்குவிக்க நிதி ஒதுக்கீடு

## யாழில் 20 பேர் உள்ளீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகாண விவசாய அமைச்சால் யாழ்.மாவட்டத்தில் தேனீ வளர்ப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. சிறந்ததொரு பொழுதுபோக்கு அம்சமாகவும் வருமானத்தை ஈட்டித்தரக் கூடிய துறையாகவும் இத் தேனீ வளர்ப்புக் காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள சாவகச்சேரி கோப்பாய், தெல்லிப்பழை, கரவெட்டி ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து 20 பயனாளிகள் இத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

இலங்கையில் காணப்படும் தேனீ வகைகளான பெருந்தேனீ கொப்புத் தேனீ , சிறுதேனீ ஆகியவை தொடர்பாகப் பயனாளிகளுக்கு விளக்கமளிக்கப்படுவதுடன் தேனீக் குடித்தொகையை இனங்காணல், உபகரணப் பயன்பாடு, தேனீ பிரித்தெடுத்தல் முறை , தேனீ கூடுகளை ஸ்தாபித்தல், உணவுப் பரிமாற்றம் மற்றும் தேனீ அறுவடை தொடர்பான பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

இத் திட்டத்தில் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகளும் புகையூட்டித் தொப்பிகளும் வழங்கப்படும்.

எனவே இத் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் பயனாளிகள் மாகாண விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிகத் தகவல்களைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)




தமிழ் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் இலங்கை வங்கி காங்கேசன் துறை கிளையில் முகாமையாளர் திருமதி. ச. தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.இதில் கடந்த வருடம் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்- சித்தன்கேணிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1984.03.05 இல் பிறந்த ரேவதி நடசத்திரம் செவ்வாய் 7 இல் (புள்ளி) கி.பா: 49 ஐக் கொண்ட இத்தாலி PR உள்ள மகனுக்கு பிதா தகுந்த பெண்ணை தேடுகிறார். அத்தம், ரேவதி, மிருகசீரிடம் முன்னுரிமை.

தொடர்பு: 077 247 3457, 077 676 5444 (8504)

## பகிரங்க ஏல விற்பனை

எமது அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் எதிர்வரும் 24.04.2019 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளன. இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதான பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
(வலயம்-02) யாழ்ப்பாணம். (C-6150)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

இணுவில் திருப்பதி

அருள்மிகு பத்மாவதி தாயார் கோதை நாச்சியார் உடனுறை

ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலய

## வசந்தோற்சவ விழா விஞ்ஞாபனம்- 2019

**17.04.2019 தொடக்கம் 20.04.2019 வரை**

நிகழும் மங்களகரமான விகாரி வருடம் சித்திரைத் திங்கள் 04 ஆம் நாள் (17.04.2019) புதன்கிழமை முதல் ஆரம்பமாகி சித்திரைத் திங்கள் 06 ஆம் நாள் (19.04.2019) வெள்ளிக்கிழமை சித்திரை பௌர்ணமியும் கூடிய நாளாகிய இன்று நிறைவுறத் தெய்வத் திருவருள் கூடியுள்ளது.

**விகாரி வருடம் சித்திரை 06ஆம் நாள் (19.04.2019) வெள்ளிக்கிழமை சித்திரை பூரணை விரதம்**

காலை 6.30 மணிக்கு ஸ்ரீநிவாசர் கருவறையில் இருந்து நந்தவனம் புறப்பாடு, யாகபூசை, விசேட திரவிய ஹோமம், ஸ்ரீநிவாசருக்கு 81 கலச மகா திருமஞ்சன தீர்த்தவாரி, துளசி அலங்காரம், சாற்று முறை, தீபாராதனை, விசேட உபசாரம்.

மாலை 4.00 மணிமுதல் யாகபூசை, மகா பூர்ணாகுதி, பெருமாள் திருவாராதனை, புஷ்பயாகம், விசேட சாற்றுமுறை, ஸ்ரீநிவாசர் கருட சேவையுடன் பிரதான கும்ப வீதியுலா, கும்பபுரோட்சணம், சாற்றுமுறை, மகாதர்சனம்

**விகாரி வருடம் சித்திரை 07 ஆம் நாள் (20.04.2019) சனிக்கிழமை**

காலை 6.30 மணிக்கு அபிஷேகம், மாலை 5.00 மணி முதல் லக்சுமி நாராயணர் திருக்கல்யாணம்.

**தினமும் இரவு 6.00 மணி முதல் 7.00 மணிவரை இசையாராதனை, நாட்டிய சமர்ப்பணம் என்பன நடைபெறும்.**

077 725 2476
021 224 2300 (8476)

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 22<br>தகைமை/தொழில்:O/L, Swiss<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்.<br>தொ.இ: B/1917 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 36<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/4092 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 30 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்Banking Course, Ass.Manager<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வங்கி. உள்நாடு<br>தொ.இ: B/1949 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Tech, Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant. உள்நாடு<br>தொ.இ: G/4096 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 24 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Sc, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: A/L, பட்டதாரி. தொழில்/தொழிலற்ற பெண். உள்நாடு<br>தொ.இ: B/1952 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 37 ½ செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு. பெண் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/4101 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 20 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்A/L Security Supervisor -Qatar<br>எதிர்பார்ப்பு: A/L,உள்நாடு<br>தொ.இ: B/2011 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 30<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பர்ப்பு A/L,பட்டதாரிஅரசஉத்தியோகம்/வெளிநாடு<br>தொ.இ: G/4104 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உலக சைவத் தமிழர்களின் புனித தாயகம் திருவண்ணாமலை

## இருக்கும் இடம் தேடி அன்னதானம் வழங்கும் நிகழ்வு 09.04.2019 நடைபெற்றது.

### கிரிவலம்

- சிவனடியார்களைப் பாதுகாப்பதும் அவர்களின் நலன்கள் பேணப்படுவதும் இல்லறத்தாரின் கடமைப்பாடாகும்.
- காலம் காலமாக சைவ சமயத்தில் உள்ள கஷ்டப்பட்ட குடும்பங்களின் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிற்கு சைவ நிறுவனங்கள் தங்களாலான உதவிகள் வழங்குவதன் மூலம் சமயத்தில் தொடர்ந்து இருப்பதற்கு வழிசமைக்கும்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்களின் மொழியறிவு சைவமத பொது அறிவு ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபடுவது காலத்தின் தேவையாகின்றது.
- மாதத்தில் ஒருநாள் நூறு சிவனடியார்களிற்கு திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

## நினைத்தாலே பேரின்ப பெருவாழ்வு








செயலாளர் சைவப்பிரகாசப் பேரவை,
யாழ்ப்பாணம்.

(C-6154)

**077 378 3316**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சோலைப் பிள்ளைகள் மழையால் பெரும் அவதி



கிளிநொச்சி செஞ்சோலைக் காணியை செஞ்சோலைப் பிள்ளைகளுக்கு வழங்க மறுத்து அக்காணிகளை அபகரிக்கும் நோக்குடன் சிலர் செயற்படுகின்றமையால் அங்கு தறப்பாளால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளில் செஞ்சோலைப்பிள்ளைகள் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் இருப்பிடங்களுக்குள் நேற்று முன்தினம் மாலை பெய்த மழை காரணமாக வெள்ளம் புகுந்துள்ளமையால் கைக்குழந்தைகளுடன் பெரும் அவலப்பட்டு இடம் பெயர்ந்து அருகிலுள்ள பாடசாலையில் தங்கியுள்ளனர்.

கிளிநொச்சி மலையாளபுரத்தில் உள்ள செஞ்சோலைக் காணியிலிருந்து அப்பிள்ளைகளைத் துரத்திவிட்டு அக்காணிகளை அபகரிக்கும் நோக்கில் இரக்கமே இல்லாத சிலர் செயற்பட்டு வருகின்றார்கள். இதன் காரணமாக செஞ்சோலையில் வளர்ந்த பிள்ளைகள் அக்காணிகளில் நிரந்தர வீட்டுத்திட்டத்தைப் பெறமுடியாது தற்காலிக தறப்பாளால் அமைத்த கொட்டகைகளில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 6.40 மணியளவில் அப்பகுதியில் பெய்த மழையால் நிரந்தரவீடுகளின்றி தறப்பாளால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளில் தங்கியிருந்த செஞ்சோலைப் பிள்ளைகளின் இருப்பிடங்களுக்குள் மழை வெள்ளம் புகுந்தமையால் அங்கு இருக்க முடியாது கைக்குழந்தைகளுடன் பெரும் அவலப்பட்டு அருகிலிருந்த அன்னை சாரதா வித்தியாலயப் பாடசாலையில் தங்கியுள்ளார்கள்.

அப்பாடசாலையில் 20 இற்கும் மேற்பட்ட செஞ்சோலைப் பிள்ளைகளின் குடும்பங்கள் தங்கியுள்ளன. (7)

# காற்றாலைக்கு கடும் எதிர்ப்பு

## பூநகரியை விட்டு வேறு இடத்திற்கு மாற்றக் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி கௌதாரிமுனை, பரம்பன்கிராய் கிராமங்களை உள்ளடக்கியதாக மீள்புதுப்பிக்கக் கூடிய சக்தி வலயத்தை உருவாக்கி காற்றுமின் சக்தி ஆலையை அமைப்பதற்கான திட்டம் இருவருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தற்போது அவ் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் அப்பகுதி மக்கள் தனக்கு ஏற்படும் பாதிப்பு பற்றி உரியவர்களுக்கு மகஜர் அனுப்பிய நிலையில் மக்கள் தம் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.

இதேவேளை மக்கள் பிரதிநிதிகளை அழைத்து மின் காற்று ஆலை சம்பந்தமாக தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் கடந்த 8 ஆம் திகதி பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் மாகாண சபை முன்னாள் கல்வி அமைச்சர் த. குருகுலராசா, பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை, பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன், கடற்றொழிலாளர் சங்க சமாசத்தலைவர் ஜோசப் பிரான்சிஸ், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் இவ் ஆலையினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி கருத்துக்களை முன்வைத்தனர்.



இவ்விடயங்களை கேட்டறிந்த கொழும்பில் இருந்து வருகை தந்த மின்சக்தி அதிகாரசபை பணிப்பாளர் விமல்ரவி, இதனால் பாதிப்பு ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மின்காற்றாலை அமைக்கும் பகுதியில் இருந்து வெளியேற்றப்படும் குடும்பங்கள் அனைவருக்கும் அதிஉச்ச நட்டஈடு வழங்கப்படுமெனவும் தேவைக்கான காணிகள் குத்தகைக்கு பெறப்பட்டு அவர்களுக்கு மாதா மாதம் குத்தகைப்பணம் வழங்கப்படுமெனவும் 500 மீற்றர் தூரத்துக்கே பாதிப்புக்கள் ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

5000 கால்நடைகள் இங்கு இருப்பதாகவும் அவற்றிற்கு பாதிப்புக்கள் ஏற்படுமெனவும் கடற்றொழிலுக்கும் விவசாயத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்படுமெனவும் சுட்டிக்காட்டினர். மேலும் இங்கு கருத்துதெரிவித்த சிறீதரன் எம்.பி.,

இந்தக் கலந்துரையாடலில் கூறப்படுபவை அனைத்தும் நிறைவேற்றப்படும் என்பதில் எங்களுக்கு சந்தேகமே உள்ளது. எங்களுக்கு தெரியாமலே பல விடயங்கள் நடைபெற்றுள்ளதாக ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியதோடு இன்று இவ்விடயம் பற்றி தீர்மானிக்க முடியாது. மக்கள் பிரதிநிதிகளுடன் பல சந்திப்புக்களை நடத்தியே முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளையும் மக்கள் விரும்பாத, மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் இவ் ஆலை அமைக்கும் வேலையை வேறு இடத்தில் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். மீண்டும் பல சந்திப்புக்களை நடத்தி தீர்மானம் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.(இ-84)

# 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றல்



(பூநகரி)
பெருந்தொகையான முதிரை

மரக்குற்றிகள் மாட்டு எருவால் மறைக்கப்பட்டு கடத்தப்படுவதாக பூநகரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்தகவலைத் தொடர்ந்து பூநகரி பொலிஸ்மா அதிபர் கபில பண்டார தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் பூநகரி மன்னார் வீதியில் 4 ஆம் கட்டைப் பகுதியில் பார ஊர்தியை மறித்து சோதனையிட்டனர்.

அதில் ஏறக்குறைய 15 இலட்சம் பெறுமதியுடைய 55 முதிரை மரக்குற்றிகளைக் கைப்பறினர். பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (7-84)

# கிடைத்த சந்தர்ப்பங்களை வீணாக்கிய தலைமைகளால் தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வில்லை!

## சிவசக்தி ஆனந்தன் ஆதங்கம்



(வவுனியா)

தமிழ்த் தலைமைகள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை, கடந்த நான்கு வருடங்களாக வீணாக்கியதன் விளைவாகவே தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது, இன்னும் நீடித்து வருகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம்சாட்டியுள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது பிரதேசத்தின் அபிவிருத்தியையும் தீர்வையும் காண தமிழ்த் தலைமைகள் தவறிவிட்டனர்.

கடந்த நான்கு வருடங்களு-க்கு முன்னர் இந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவந்தோம்.

அந்த ஆட்சி மாற்றத்தின் ஊடாக எங்களுடைய பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் நீண்டகாலமாக எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என நினைத்து மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

ஆனால் எங்களுடைய அரசியல் தலைவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை மக்களுக்காகப் பயன்படுத்தவில்லை என்பதே கவலையான விடயம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# திருக்குறள் எழுத்துத்திறன் போட்டி முடிவுகள் விபரம்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் வருடந்தோறும் நடத்தும் திருக்குறள் தமிழ் இலக்கிய எழுத்துத்திறன் தேர்வில் கிளிநொச்சி மாவட்ட நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரிவு - அ (12, 13) :- முதலாமிடம் இருவர்- சி.அனோயா (கிளி/உருத்திரபுரம் உ.நி.ப), ச.திகழினி (கிளி/உருத்திரபுரம் உ.நி.ப), இரண்டாமிடம் சி.கீர்த்தனா (கிளி/உருத்திரபுரம் உ.நி.ப), மூன்றாமிடம் ப.தமிழ்ச்செல்வி (கிளி/உருத்திரபுரம் உ.நி.ப), பிரிவு – ஆ (10, 11) :- கரைச்சிக்கோட்டம் முதலாமிடம் யெ.அனோயன் (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் மோ.அகவிழி (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), மூன்றாமிடம் வி.நிவேதா (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), பிரிவு – இ (8, 9) முதலாமிடம் லோ.துவாரகா (கிளி/பளை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் ப.மதுசா (கிளி/பளை மத்திய கல்லூரி), மூன்றாமிடம் பி.எழிலமுதன் (கிளி/பாரதி பள்ளி), பிரிவு – ஈ (6, 7) முதலாமிடம் சு.யானுசா (கிளி/கிளிநொச்சி உ.நி.ப), இரண்டாமிடம் ச.பாமகள் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.), மூன்றாமிடம் ஆ.கிருசோந்த் (கிளி/கிளிநொச்சி உ.நி.ப.), பிரிவு - உ (4, 5) முதலாமிடம் அ.அபிசாந் (கிளி/இராமநாதபுரம் உ.நி.ப.), இரண்டாமிடம் த.பபிசன் (கிளி/கிளிநொச்சி மத்திய தொ.ப.), மூன்றாமிடம் உ.தர்மிலன் (கிளி/புனித திரேசா பெண்கள் கல் லூரி), பிரிவு – ஊ(2,3) முதலாமிடம் நா.கயல்நிலா (கிளி/கிளிநொச்சி உ.நி.ப.), இரண்டாமிடம் சி.ஆரணா (கிளி/கிளிநொச்சி மத்திய தொ.ப.), மூன்றாமிடம் பா. பாவரசன் (கிளி/முருகானந்தா தொ.ப.). (7-84)

# மன்னாரில் மின்னல் தாக்கியதில் களஞ்சியப் பகுதி முற்றாகச் சேதம்

## மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் நாசம்

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வண்ணாங்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இடி மின்னல் தாக்கியதில் களஞ்சியப் பகுதி முற்றாகச் சேதமடைந்தது.


வண்ணாங்குளம் ஆண்டாங்குளத்தைச் சேர்ந்த அ.சந்தான் என்பவருக்குச் சொந்தமான பொருட்கள் களஞ்சியப்படுத்தும் பகுதியே இவ்வாறு சேதமடைந்தது.



இவ் அனர்த்தத்தில் சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரியவருகிறது. (இ-10-285-286)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரகுப்தன் விரதம்



சிவபெருமானுக்கு ஓர் உல கத்தை சிருஷ்டித்து பார்க்க விரும்பி அவருடைய விருப்பங்களை நிறைவேற்றும் மகா விஷ்ணு விடம் தெரிவித்தார். அவர் தனது நாபிக்கமலத்தில் இருந்து பிரம்மாவை வரவழைத்து உல கத்தை சிருஷ்டி செய்யும் படி வேண்டினார். அங்கே எண்ணரிய ஜீவகோடிகளை உற் பத்தியாக்கி இவர்களை காலக்கிரமத்தில் வாழ்க்கை முடியும் போது அவர்களது பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மேல் உலகத்தில் தண்டனைகள் வழங்கவேண்டும் என விஷ்ணுவும் சிவனும் யமதர்மராஜனுக்கு கட்டளை இட்டார்கள். அப்படியே சிறிது காலம் செல்ல யமதர்மராஜன் ஜீவாத்மாக்களின் பாவ புண்ணியங்களை கணக்கிட முடியாமல் மிக வேதனையுடன் சிவபெருமானிடம் சென்று விண்ணப்பித்தார். அப்போது சிவன் பிரம்மாவிடம் சென்று தீர்வைப் பெற்றுக் கொள் எனப் பணித்தார். யமதர்மராஜனும் மகிழ்வுடன் பிரம்மாவிடம் சென்று தனது குறையைக் கூறினார்.

அப்போது பிரம்மா பார்வதி தேவி எதேச்சையாக வரைந்த ஓவியத்தை சிவன் தன் அனுக்களால் ஸ்பரிசித்து ஓர் குழந்தையை தோற்றுவித்து சித்திர குப்தன் என பெயரிட்டு வளர்கின்றார். அவரை உனக்கு துணையாக அனுப்புகின் றேன். அவர் பூவுலகத்தில் உள்ளவர்கள் செய்யும் பாவ புண்ணியங்களைக் கணக்கு எழுதி உமக்கு ஒப்புவிப்பார். கவலையை விடு என யமதர்மராஜனை அனுப்பினர். அன்று தொட்டு சித்திரகுப்தன் பூமியில் உள்ளோர் செய்யும் பாவ புண்ணியங்களை எழுதி வருகின்றார்.

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் பௌர்ணமி தினத்தில் சித்திர குப்தனுக்கு ஆசனமிட்டு வஸ்திரமளித்து அவருடைய கதையை படித்து சித்திரைக்கஞ்சி வார்ப்பார்கள். கிராமங்களில் இப்போதும் பக்தி பூர்வமாக இவ் விழா நடைபெறுகின் றது. இலங்கையில் சித் திர குப்தனுக்கு கோவில் இல்லாவிட்டாலும் அவரை கும்பத்தில் ஆவகணம்பண்ணி பூஜை வழி பாடு இயற்றுகின்றார்கள். இந்தியாவில் காஞ்சிபுரம் பஸ் நிலையத்திற்கு முன் பாக சித்திர குப்தனுக்கு தனிக் கோவில் அமைத்துள்ளார்கள். மற்றும் சிதம்பரத்தில் சிவகாமி அம்மன் உட்பிரகாரத்திலும் திரு வண்ணாமலையில் உண்ணா முலையம்மன் சந்நிதியில் நவக்கிரகங்களுக்கு பக்கத்தில் இவருக்கு கோவில் அமைந்துள்ளது.

19.04.2019 அன்று இவருடைய விரதம் அனுஷ்டிக்கப் படும் அன்றைய தினம் விரதம் அனுஷ்டித்து தான தர்மம் புரிந்து தர்மதேவதையின் அனுக்கிரகம் பெற்று நோயின்றி வாழ்ந்து சுபீட்சமடைவோமாக. சித்திரகுப்தனை பூஜித்தால் மீண்டும் பிறப்பு இருக்காது. பாவம் செய்ய வேண்டும் என்கிற எண்ணமே வராது. எம பயம் போகும். மனதில் எப்போதும் சந்தோசம் நீடிக்கும். நவக்கிரகங்களில் கேதுவின் அதி தேவதை சித்திரகுப்தன். எனவே சித்திர குப்தனை வணங்கினால் கேதுவினால் ஏற்படக் கூடிய கெடுபலன் நீங்கும்.

சிவனடியான்

# ஊழல், மோசடி பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை 22ம் திகதி

(கொழும்பு)

ஊழல், மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுக்கிணங்க முதற்கட்ட விசாரணைகளுக்காக அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் சிலரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் அடுத்த சில வாரங்களுக்குள் ஆஜராகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை, ஊழல், மோசடிகள் விசாரணைகளுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மேலும் 6 பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்கிய பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஆணைக்குழுவின் முதற்கட்ட விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் பிரிவில் 18 உத்தியோகத்தர்கள் உள்ளடங்குகின்றனர். மஹரகம புற்றுநோய் வைத்திய சாலையில் மருந்து கொள்வனவின் போதும் பசுக்கள் இறக்குமதியிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள், காப்புறுதி தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து எதிர்வரும் 22 ஆம் மற்றும் 23 ஆம் திகதிகளில் சாட்சி விசாரணைகள் இடம்பெறவுள்ளன. (இ-7)

# புவிதினம் முதல் சாவகச்சேரியில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை

## நகர சபை தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரும், ஹோர் நிறுவனத்தினரும் இணைந்து பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் கடந்த 16 ஆம் திகதி பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக சாவகச்சேரி வர்த்தகர்களுடன் நகர சபையினர் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். குறித்த கலந்துரையாடலின் போது எதிர்கால சந்ததியினரின் வாழ்வினை பிரகாசப்படுத்தும் வகையில் ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியாக சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவை யாவன,

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை உலக புவி தினத்தன்று சாவகச்சேரி வர்த்தகர்கள் அனைவரும் இணைந்து பொலித்தீன், லஞ்சீற் மற்றும் சொப்பின் பயன்பாட்டை முற்றாகத் தடை செய்தல்.

அன்றைய தினம் காலையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து சாவகச்சேரி நகரசபை நோக்கி பொலித்தீன் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி ஒன்றினை நடத்துதல் ஆகிய சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு அவசியமான சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அத்துடன் 22 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ள பொலித்தீன் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியில் வர்த்தகர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து மே முதலாம் திகதியில் இருந்து சாவகச்சேரி நகர சபையினர் அரச திணைக்களங்களில் இருந்து கழிவுகளை அகற்றும் போது அதனை உக்கும், உக்காத கழிவுகளாகத் தரம் பிரித்தே பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

அவ்வாறு தரம் பிரிக்கப்படாத திணைக்களங்களின் கழிவுகளை சாவகச்சேரி நகர சபை அகற்றமாட்டாது எனவும் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர். தற்போது உணவகங்களில் உக்கும், உக்காத கழிவுகளாக பிரித்து அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# மட்டக்களப்பில் பெரும் சோகம்




(ஏறாவூர்)

மகியங்கனைப் பகுதியில் விபத்திற்குள்ளாகி உயிரிழந்த பத்துப் பேரின் சடலங்களுக்கும் மட்டக்களப்பில் ஏராளமானோர் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

மகியங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்கு பின்னர் நேற்று முன் தினம் மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் சடலங்கள் நேற்று அதிகாலை மட் டக்களப்புக்கு கொண்டு செல்லப்பட்டன. பத்துப் பேரின் சடலங்களும் டச்பார் மற்றும் மாமாங்கம், சின்ன உப்போடை ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளில் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையை உலுக்கியுள்ள இந்தக் கோரச் சம்பவம் மட்டக்களப்பில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், உயிரிழந்தவர்களுக்கு பெருமளவானோர் அஞ்சலி செலுத்தினர். (இ-7)

# இன நல்லுறவு, நல்லிணக்கம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவருக்கு எடுத்துரைப்பு



(ஏறாவூர்)

இலங்கை மற்றும் மாலை தீவு நாடுகளுக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் (Alaina Teplitz) இற்கும் சமூக வலுவூட்டல் ஆரம்பக் கைத் தொழில் அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு ஈஸ்ட்லகூன் ஹோட்டலில் இடம் பெற்றது.

மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்கத் தூதுவர் மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள், இனங்களுக்கிடையிலான நல்லுறவு, நல்லிணக்கம், மட்டக்களப்பு மக்கள் எதிர்கொள்ளும் சமகால சவால்கள் குறித்து அமைச்சருடன் கலந்துரையாடியதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள காணி தொடர்பான பிரச்சினைகள், முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் ஏனைய சவால்கள், தொடர்பில் அவரால் இதன்போது அமெரிக்கத் தூதுவருக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறித்த சந்திப்பின் போது அமெரிக்கத் தூதுவராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி சியான் ருத், சமூக வலுவூட்டல் அமைச்சின் பிரத்தியேக செயலாளர் அம்ஜத் மௌலானா ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2019-14.05.2019



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மூன்றாமிடம் எனப்படும் சகாய ஸ்தானத்தில் சனி, குரு, கேது ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்திருக்கிறார்கள். கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் மன நிம்மதி கொஞ்சம் குறைவாகவே இருக்கும். சில காரியங்களைச் செய்ய இயலாதபடி இடையூறுகள் உருவாகும். சில காரியங்களை செய்ததன் மூலம் பிரச்சினைகள் உருவாகும்.

அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். எதையும் நிதானித்து செய்ய இயலாது. ஏற்கனவே திட்டமிட்டு வைத்திருந்த காரியங்களை மாற்றுவீர்கள். பயணங்களால் இடையூறு ஏற்படும். செவ்வாய் உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் அஷ்டமத்தில் மறைந்து சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத்துணை வழியே சில பிரச்சினைகள் தோன்றி மறையும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கோபம் காரணமாக நண்பர்கள் பகையாவர். அண்ணன்- தம்பிகளையும், அக்கம் பக்கத்தினரையும் அனுசரித்துச் சென்றால்தான் அமைதி காண முடியும். வாங்கிய சொத்துக்களை விற்க முடியாமல் தவிப்பீர்கள்.

விரயாதிபதி புதன் 6 ஆம் இடத்தில் நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். உறவினர் வழியில் ஒருசில நல்ல காரியங்களும் நடைபெறலாம். ஆனால் அந்த நல்ல காரியங்களை நீங்கள் முன்னின்று நடத்தினால் சில பிரச்சினைகள் உருவாகலாம். பஞ்சம ஸ்தானாதிபதி சனி இம்மாதம் வக்கிரம் பெறுகிறார். எனவே பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

முன்னேற்றம் தருகின்ற மூன்றாமிடத்தில் கேதுவும் ஒளிமயமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்கும் ஒன்பதாமிடத்தில் ராகுவும் இருப்பதால் அதற்குரிய சிறப்பு வழிபாடுகளைச் செய்வதன் மூலம் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றிக் கொள்ளலாம். இம்மாதம் சித்ரா பௌர்ணமி வருகிறது. அன்றைய தினம் சித்ரகுப்தனை அவசியம் வழிபட வேண்டும். மேலும் வராக ஜெயந்தியன்று விஷ்ணுவை வழிபடுங்கள்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிநாதனாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது, ஆரோக்கியத் தொல்லையில் இருந்து ஓரளவு விடுபட இயலும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு

## முற்பாதி விரயம், பிற்பாதி வரவு

வரும். எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு காரியம் நிறைவேறும். மே 11 ஆம் திகதி மேஷத்திற்கு சுக்கிரன் செல்கிறார். இக்காலத்தில் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். சிக்கனத்தைக் கையாண்ட நீங்கள் இனி செலவிற்கு அஞ்சமாட்டீர்கள். உறவினர்கள் மனக் கசப்பு ஓரளவு அகலும். புத-ஆதித்ய யோகம் செயற்படுவதால் கல்விக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நேரமிது.

### பொன்னான புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், புதன். அவர் ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷ இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அங்குள்ள சூரியனுடன் இணைவதால் புத- ஆதித்ய யோகம் ஏற்படும். எனவே பொருளாதார நிலை உயரும். புதிய வாய்ப்புகளும் ஒப்பந்தங்களும் வந்து சேரும். ஆடை,




ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டு யோகம் கைகூடும். மே 12 ஆம் திகதி ரிஷபத்திற்கு புதன் வருகிறார். இக்காலத்தில் மிகுந்த இராஜயோகம் செயற்படும். விவாகப் பேச்சுக்கள் திடீரென முடிவாகலாம். தந்தைவழி உறவில் விரிசல் ஏற்பட்டு அகலும். வாங்கிய கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 7 ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அதன்பிறகு உங்கள் வாழ்க்கைப் பாதையில் மிகுந்த முன்னேற் றங்கள் ஏற்படும். சில காரியங்கள் திடீர் திடீரென முடிவாகும். தர்ம சிந்தனை மேலோங்கும். முன்னோர் சொத்துக்களை முறையாக பங்கீடு செய்வீர்கள். ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர்கள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் மாதம் இது. இம்மாதம் சஷ்டி விரதமிருந்து சண்முகநாதப் பெருமானை வழிபடுவதோடு துர்க்கை வழிபாடும் செய்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இந்த மாதம் நீங்கள் திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லலாம். சேமிப்புகள் கரையும். உற்றார், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைப்பது அரிது. காரியங்களைச் செய்வதில் மனக்குழப்பம் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் சென்றால்தான் அமைதி கிடைக்கும். மிதுன செவ்வாய் சஞ்சாரத்திற்குப் பிறகு பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி வந்து சேரும். பிறரை விமர்சனம் செய்ததன் மூலம் ஏற்பட்ட பிரச்சினை அகலும். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேருவர். தாய் மற்றும் உடன் பிறப்புகள் தக்க நேரத்தில் உதவி செய்வர். பிள்ளைகளை மட்டும் உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. அதிக விலை கொடுத்து வாங்கிய பொருட்களை கவனமுடன் கையாளுங்கள். அரசியல் வாதிகளுக்கு மக்கள் செல்வாக்கு உயரும். சனீஸ்வர வழிபாடும், சித்ரகுப்தன் வழிபாடும் சந்தோசத்தை வரவழைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருட சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே தனாதிபதி குரு தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இது யோகம்தான். பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டுவர். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும். அல்லது வாங்கிக் குடியேற வேண்டும் என்று நீங்கள் நினைத்திருந்தால் அந்த எண்ணங்கள் ஈடேறப் போகிறது. தெய்வபலம் உங்களுக்கு கைகொடுத்து உதவும். திடீர் முன்னேற்றங்கள் ஏற்படும். நினைத்த நேரத்தில் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

இராசிநாதன் செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியையே பார்க்கிறார். எனவே யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அடுக்கடுக்காக வந்து கொண்டேயிருக்கும். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். வாகன யோகம் முதல் வளம் தரும் யோகங்கள் வரை படிப்படியாக வந்து சேரும் மாதம் இது. அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்வீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும் விதத்தில் சுக்கிரனின் சஞ்சாரம் இருக்கிறது. ஆரோக்கியத் தொல்லை அகலும். 'இல்லத்தில் மங்கல ஓசை கேட்கவில்லையே' என்று நினைத்தவர்களுக்கு, இப்பொழுது சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்.

அதிசார குருவின் பார்வை 6, 8, 10 ஆகிய மூன்று இடங்களிலும் பதிவதால் மதிப்பும் மரியாதையும் உயரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். உத்தியோகம், தொழிலில் உயர்நிலை உருவாகும். கேட்ட உதவிகளை மேலதிகாரிகள் செய்து கொடுக்க முன்வருவர். தேங்கிய காரியங்கள் வேகமாக நடைபெறும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். எதிர்காலத் திட்டங்கள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். தொழில் வளர்ச்சியில் மாற்று இனத்தவர்களின் பங்கு அதிகரிக்கும்.

ஏழரைச் சனியில் 2 ஆவது சுற்று நடப்பவர்கள் மிதமிஞ்சிய பொருளாதார வளர்ச்சியைக் காண்பர். சூரிய பலமும் உச்சம் பெற்றிருப்பதால் அரசுவழி ஒத்துழைப்புகளும் அரசாங்க பதவிகளும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். இம்மாதம் சித்ரா பௌர்ணமியன்று சித்ர குப்தன் வழிபாட்டையும் வராக ஜெயந்தியன்று பெருமாள் வழிபாட்டையும் முறையாக மேற்கொண்டால் முன்னே

## தனாதிபதி குருவால் தனவரவு திருப்தி தரும்

ற்றத்தின் முதல் படிக்குச் செல்லலாம்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு சப்தம விரயாதிபதியான சுக்கிரன் உச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன்மூலம் உதிரி வருமானங்கள் பெருகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மீனத்தில் உள்ளபுதனுடன்இணைந்து புத-சுக்கிர சேர்க்கை உருவாகிறது. மேலும் நீசபங்க இராஜயோகமும் ஏற்படுகிறது. எனவே பொருளாதாரத்தில் உயர்வும் புகழ்மிக்கவர்களால் நன்மையும் கிடைக்கும். உங்களால் வளர்ச்சியடைந்தவர்கள் உங்களை சந்தித்து நன்றி கூறுவர். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். மே 11 ஆம் திகதி மேஷத்திற்கு சுக்கிரன் செல்கிறார். எனவே 6 ஆம்இடம் வலுவடைகிறது. அதன் விளைவாக உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளி வந்து புதிய தொழில் தொடங்க முன்வருவர்.




### பொன்னான புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷத்திற்கு புதன் செல்கிறார். அங்கு புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே தங்கு தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். தாராள மனப்பான்மையுடன் செயற்பட்டு மக்கள் மனதில் இடம் பிடிப்பீர்கள். மே 12 ஆம் திகதி ரிஷபத்திற்கு புதன் வருகிறார். லாபாதிபதியாக விளங்கும் புதன் 7 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் வாழ்வில் வளர்ச்சி கூடும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் செவ்வாய் அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கப்போகிறார். இக்காலத்தில் கொஞ்சம் கவனம் தேவை. உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலம்ஆதாயம்உண்டு. செவ்வாய், பூமிகாரகன் என்பதால் இக்காலத்தில் ஒரு சிலருக்கு பூமி வாங்கும் யோகம் ஏற்படும். கட்டிய வீடு வாங்குவதா? அல்லது இடம் வாங்கி வீடு கட்டிக் கொள்வதா? என்பதை சுய ஜாதகத்தைப் பார்த்து முடிவெடுத்துக் கொள்ளுங்கள். 2 இல் கேது, சனி, குரு ஆகிய மூன்று கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. அவற்றை செவ்வாய் பார்க்கிறார். இராசிநாதனாக செவ்வாய் இருப்பதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப்பெருமான் வழிபாட்டையும் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இந்த மாதம் மனையில் மங்கல ஓசை கேட்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பாசமும் நேசமும் அதிகரிக்கும். குடும்பப் பெரியவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயற்பட்டால் பிரச்சினைகள் வராது. தாய்வழி ஆதரவு பெருகும். ஒரு சிலருக்கு உடன்பிறந்தவர்களால் நன்மைகள் வந்து சேரும். பிள்ளைகளால் பெருமைக்குரிய விடயங்கள் நடைபெறும். இருப்பினும் அவர்களை உங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். வாகன யோகம் உண்டு. வளர்ச்சி கூடுதலாக கிடைக்க வராகி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுமைகளை விட்டுவிட்டு மக்களுக்காக பணிபுரியுங்கள்

## அரச உத்தியோகத்தர்களிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை

(செம்மலை)

வேற்றுமைகளை விட்டுவிட்டு எங்களுடைய மக்களுக்காக பணிபுரியுங்கள் என அரச உத்தியோகத்தர்களிடம் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கோரிக்கை விடுத்துள்ளார்.



வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தமிழ்-சிங்களப் புதுவருட விழாவானது முல்லைத்தீவு - செம்மலை மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தமிழ் ஊடகங்கள் தன்னை தென்னிலங்கையின் கைப்பாவையாக இருக்கக்கூடும் என்று கூறுவதாகவும் தான் மக்களுக்கு சேவையாற்றுவதற்காக கைப்பாவையாக மாத்திரமல்லாது ஆண்டியாகவும் செல்லத் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முப்பதாண்டு, போருக்குப் பின் பத்தாண்டுகள் அதாவது குறைந்தளவு ஒரு தசாப்தம் முடிந்திருக்கின்றது. ஒரு தலைமுறையே எங்களுடைய தேசத்தினை விட்டுப் போகவேண்டிய கட்டாயத்தை காலம் எங்களுக்கு விட்டிருக்கின்றது.

ஆகையினாலே மீதம் இருக்கின்ற நாங்கள் வளர்ந்துவரும் இந்த இளம் சமுதாயத்திற்கு தலைமை தாங்கவேண்டிய இரட்டிப்பான பொறுப்பை எங்கள் தோள்களில் சுமந்திருக்கின்றோம். ஆகையினாலே இங்கு கூடியிருக்கின்ற அரசியல், அரச, அரசாங்க என்று மூன்றுபகுதிகளுடைய உத்தியோகத்தர்களை, வேட்பாளர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவெனில் நீங்கள் ஒரு இடத்திலே உங்கள் பணியைச் செய்துகொண்டிருப்பது நலமாக இருக்கிறது.

நீங்கள் வெவ்வேறு கட்சியைச் சேர்ந்திருப்பதும் ஜனநாயகமாக இருக்கின்றது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழர்களைப் பொறுத்தவரையில் இருப்பது ஒருதேசம், இருப்பது ஒரு எதிர்காலம், கட்டவேண்டியது ஒரு சமுதாயம், ஆகையினாலே கட்டியமைக்கவேண்டிய அந்த சமுதாயத்திற்காக குறைந்தளவு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது எங்களுடைய வேற்றுமைகளை விட்டு எங்களுடைய மக்களுக்காக பணிபுரியுங்கள் என்று தாழ்மையாக நான் கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார். (7)

# வாக்குச்சாவடியில் மயங்கி விழுந்து இருவர் பலி!

தமிழகத்தில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், வாக்குச்சாவடியில் 2 முதியவர்கள் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளனர்.

நாடாளுமன்ற இரண்டாம் கட்டத் தேர்தல் நேற்று நடைபெற்றது.

இந்தநிலையில் ஈரோடு மாவட்டம் சிவகிரியில் உள்ள வாக்குச்சாவடியில் முருகேசன் என்ற முதியவர், வாக்களித்துவிட்டு வெளியே வந்ததும் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

அதேபோன்று சேலம் மாவட்டம் வேடப்பட்டியில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்த முதியவர் கிருஷ்ணனும் மயங்கி விழுந்து உயிரிழந்தார். (7)

# பழுதடைந்த மீன்கள் அழிப்பு

(கண்டாவளை)

கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள கிளிநொச்சி நகர பொதுச் சேவை சந்தையில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவால் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட மீன்கள் அழிக்கப்பட்டன. (7-315)



# சோளச் செய்கைக்கான இழப்பீடு இதுவரையில் வழங்கப்படவில்லை

## விவசாயிகள் விசனம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் படைப்புழுத்தாக்கம் காரணமாக அழிவடைந்த சோளச்செய்கைக்கான இழப்பீடு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சோளச்செய்கையில் ஏற்பட்ட படைப்புழுத்தாக்கம் காரணமாக சோளச்செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளது.

இவ்வாறு மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவு தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதாவது, படைப்புழுவின் தாக்கம் ஏற்பட்டிருப்பின் அவை முழுமையான அழிவாகவே கருத முடியும் என்றும் அதில் பகுதியளவு மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் இதற்கான காப்புறுதி கட்டாயமில்லை எனவும் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மாவட்டத்தில் படைப்புழுவின் தாக்கத்தினால் அழிவடைந்த இரு சோளப்பயிர்ச் செய்கைகளுக்கு எந்தவிதமான இழப்பீடுகளும் இதுவரை வழங்கப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (7-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 110 |
| தக்காளி | 100 | 120 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 120 |
| கோவா | 80 | 60 | 70 |
| கரட் | 120 | 100 | 80 |
| பூசணி | 50 | 30 | 30 |
| புடோல் | 100 | 70 | 130 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 85 |
| பாகற்காய் | 200 | 160 | 130 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 40 |
| பயற்றங்காய் | 300 | 180 | 130 |
| லீக்ஸ் | 150 | 100 | 70 |
| பீற்றூட் | 100 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 300 |
| போஞ்சி | 150 | 240 | 130 |
| கத்தரிதம்புள்ள | 50 | -- | 30 |
| கீரை-1பிடி | 50 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 240 | 230 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30 | 35 |
| இராசவள்ளி | 160 | 140 | 100 |
| வெங்காயப்பூ | -- | 160 | 210 |
| முள்ளங்கி | 80 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | -- | 60 | 110 |

# வீதிகளைப் புனரமைப்பதற்கான கிரவலைப் பெற முடியாத நிலை

## மாவட்ட அரச அதிபர் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கம்பரெலியத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கான கிரவல் மண்ணைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சேதமடைந்த வீதிகள் கட்டம் கட்டமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வீதிகளைப் புனரமைப்பதற்குரிய கிரவல் மண்ணைப்பெற்றுக் கொள்வதில்பெரும் சிரமம் ஏற்பட்டிருப்பதாகவும் அதனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் பல்வேறு தரப்புக்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் கம்பரெலியத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்குரிய கிரவலைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரவலுக்கான தட்டுப்பாடு காணப்படுவதால் எதிரகாலத்தில் அங்கிருந்து கிரவலை வழங்க முடியாத நிலை ஏற்படும் என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார். (7-315)






வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய தமிழ்-சிங்களப் புதுவருட விழாவானது நேற்றைய தினம் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாநிலங்களில் புயல் மழை!

## உயிரிழப்பு 60 ஆக அதிகரிப்பு



(டில்லி)

வடமாநிலங்களில் பெய்து வரும் புயல் மழைக்கு பலியானோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடமாநிலங்களில் தற்போது புயல் மற்றும் கனமழை பெய்து வருகிறது. இதையடுத்து, ராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் கனமழையில் சிக்கி மக்கள் பலியாகி வருகின்றனர்.

ராஜஸ்தானின் பல்வேறு பகுதிகளில் நேற்று புயல் தாக்கியதுடன் கனமழை பெய்தது.

இதனால் பல இடங்களில் வீதிகள், மரங்கள், மின்கம்பங்கள் சேதமடைந்தன.

புயல் மழையால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்தார்.

அத்துடன் மழையால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 இலட்சம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# அரசியல் கட்சித் தலைவர்கள் வாக்குப் பதிவு







தமிழகம் உட்பட 13 மாநிலங்களில் இரண்டாம் கட்ட மக்களவை தேர்தல் நடைபெற்று வருகிறது. காலை 7 மணிக்கு ஆரம்பமாகி வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. இந்த நிலையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

முதலமைச்சர் பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வன், மு.க.ஸ்ராலின், டி.டி.வி.தினகனரன், ப.சிதம்பரம், கமல்ஹாசன், வைகோ உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் வாக்குகள் பதிவு செய்தனர். (7)

## மக்களவைத் தேர்தல்

# ஆர்வமாக வாக்களித்த திரைப்படப் பிரபலங்கள்







(சென்னை)

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகளில், தமிழ்த் திரைப்பட பிரபலங்கள் தங்களது வாக்கினை ஆர்வமாக பதிவு செய்து வருகின்றனர்.

12 மாநிலங்களில் இரண்டாம் கட்டமாக 95 மக்களவை தொகுதிகளுக்கு நேற்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் வாக்குப்பதிவுகள் இடம்பெற்றன.

இந்நிலையில் நடிகர்கள் ரஜினிகாந்த், அஜித், விஜய் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் தங்களது வாக்கினை பதிவு செய்தனர். (7)

# போர்த்துக்...
# 30 சுற்று...

## 28 பேர் படு...




போர்த்துக்கல் தீ... (Madeira) என்ற தீ... சுற்றுலாப் பயண... சென்ற பேருந்து... ளானதில் 30 பேர்... லேயே உயிரிழந்து...

அத்துடன் மேலும் 28 பேர் படுகாயமடைந்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த விபத்து நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி குடியிருப்புக்கள் உள்ள தாழ்ந்த பகுதியில்

# மீண்டும் அ...
# நடவடிக்கை...



(பியாங்யாங்)

சக்திமிக்க ஆயுதங்களை தாங்கிச் செல்... வல்லமை படைத்த வழிகாட்டுதல் ஆயுதமொன்... வடகொரியா சோதனை செய்துள்ளது.

இது அணுவாயுத வகையா என்பது தொடர்ப... எவ்வித தகவலும் வெளியாகவில்லை. ஆனா... வழிகாட்டுதல் ஆயுதமென வடகொரியத் தகவல்... தெரிவிக்கின்றன.

குறிப்பாக சக்திவாய்ந்த ஆயுதங்கள், வி...னங்கள் ஆகியவற்றை தாங்கிச் செல்லும் வ...லமை கொண்டதென நிபுணர்கள் கூறுகின்றன... அத்தோடு, பல்வேறு நிலைகளிலிருந்து தாக்கு... நடத்தும் வகையில் இந்த ஆயுதம் உள்ளதென்... தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்க ஜனாதி... டொனால்ட் ட்ரம்புடன் ஹனோயில் நடத்தப்ப... பேச்சுவார்த்தையின் பின்னர் வடகொரியா பே... கொண்ட முதலாவது ஆயுத சோதனை நடவடிக்... இதுவாகும்.

கடந்த பேச்சுவார்த்தை எவ்வித சாதக முடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



## ...துக்கலில் கோர விபத்து! ...லாப் பயணிகள் மரணம்!

...டுகாயம்





...தீவான மடெய்ரா ...தீவில், ஜேர்மனிய ...பணிகளை ஏற்றிச் ...ந்து விபத்துக்குள் ...பேர் சம்பவ இடத்தி ...ந்துள்ளனர்.

கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இது குறித்து அப்பகுதி முதல்வர் பிலிப் சௌஷா தெரிவிக்கையில், "இந்த கோர விபத்தை என்னால் விபரிக்க முடியவில்லை. இந்த மக்களுடைய துன்பங்களை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

குறித்த பேருந்தில் 55 பேர் பயணித்துள்ளனர். அவர்களில் 17 பெண்கள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்.

மேலும் படுகாயமடைந்த 25 பேர் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (7)

## தென்கொரியாவில் சரமாரியாகக் கத்திக்குத்து சிறுமி உட்பட 5 பேர் பரிதாபமாகப் பலி!

(சியோல்)

தென்கொரியாவில் கத்திக்குத்து தாக்குதலில் 12 வயது சிறுமி உட்பட 5 பேர் இரத்த வெள்ள த்தில் சரிந்து சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

தென்கொரியாவின் ஜியோங் சங் மாகாணத்தில், ஜின்ஜு நகரில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று உள்ளது. இந்த அடுக்கு மாடி குடியிருப்பின் 4ஆவது தளத்தில் வசித்து வந்த 42 வயதான நபர் ஒருவர் நேற்றுக்காலை தனது வீட்டுக்கு தானே தீவைத்தார்.

அதன் பின்னர் கத்தியுடன் வீட்டில் இருந்து வெளியேறிய அவர், 2ஆவது தளத்துக்கு சென்று நின்றார். இதற்கிடையில், அவரது வீட்டில் வைக்கப்பட்ட தீ, அருகில் இருந்த மற்ற வீடுகளுக்கும் பரவியது. இதனால் அந்த வீடுகளில் இருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு கீழே ஓடிவந்தனர். அப்போது, அவர்களை 2ஆவது தளத்தில் நின்று கொண்டிருந்த அந்த நபர் கத்தியால் சரமாரியாக குத்தி னார்.

இதில் 12 வயது சிறுமி உட்பட 5 பேர் இரத்த வெள்ளத்தில் சரிந்து சம்பவ இடத்திலேயே பலியாகினர். இந்தப் பரபரப்பு சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த பொலிஸார் அந்த அடுக்கு மாடி குடியிருப்பை சுற்றிவளைத்தனர். பின்னர் 4ஆவது மாடியில் எரிந்த தீயை அணைத்தனர். அதனை தொடர்ந்து, தாக்குதல் நடத்திய நபரை சுற்றி வளைத்த பொலிஸார் அவரை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர். பொலிஸாரிடம் அவர் தனக்கு சம்பளம் கிடைக்க தாமதமான தால் விரக்தியில் இப்படி செய்ததாக பொலிஸாரிடம் கூறினார். ஆனால் வேலை எதுவும் பார்க்கவில்லை என்பது விசாரணையில் தெரிய வந்தது. (7)

## பெரு முன்னாள் ஜனாதிபதி அலன் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை

(லிமா)

பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அலன் கார்சியா தன்னைத் தானே சுட்டுக்கொண்டதில் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

தலையில் குண்டு பாய்ந் துள்ள நிலையில் தலைநகர் லிமாவி லுள்ள காசிமிரோ உல் லோவா வைத்தியசாலையில் அவருக்கு சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

பிரேசிலியக் கட்டுமான நிறுவனமான Odebrecht இடமிருந்து கையூட்டுப்பெற்றதாக அலன் கார்சியா குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பாக அவரைக் கைது செய்யப் பொலிஸார் சென்ற வேளையிலேயே அவர் தன்னைத் தானே சுட்டுக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் பெருவின் முன்னாள் ஜனாதிபதி அலன் கார்சியா குறித்த இந்தக் குற்றச்சாட்டினை மறுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நேற்று அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.(7)

## தேவாலயத்தில் ஏற்பட்ட தீயை அணைத்த தீயணைப்பு வீரர்களுக்கு போப் நன்றி

(பாரிஸ்)

பிரான்ஸின் பாரம்பரிய சின்னமான நோட்ரே டேம் தேவாலயத்தை தீ விபத்திலிருந்து மீட்ட தீயணைப்பு வீரர்களுக்கு புனித பாப்பரசர் பிரான்சிஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செயின்ட் பீற்றர் சதுக்கத்தில் பாப்பரசர் பிரான்ஸிஸ் உரையாற்றும் போது நோட்ரே டேம் தேவாலய தீ விபத்தானது மிகுந்த வருந்தத்தக்க நிகழ்வாகும். தேவாலயத்தின் கூரை எரிந்தது போன்ற நிகழ்வுகளால் நான் அதிர்ச்சியடைந்தேன்.

தாங்கள் உயிரைப் பணயம் வைத்து தேவாலயத்தில் ஏற்பட்ட தீயை அணைத்த தீயணைப்பு வீரர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் யுனெஸ்கோவின் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றான 850 ஆண்டு பழைமையான நோட்ரே டேம் தேவாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

உடனடியாக தீயணைப்பு வீரர்களுக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டு அவர்கள் வரவழைக்கப் பட்டனர். மேலும், அருகில் இருக்கும் தேவாலயங்களும் தொடர்ந்து மணிகளை ஒலிக்கவிட்டு உதவிக்கு வரக் கோரின. இந்தத் தீ விபத்தில் தேவாலயத்தின் மரத்திலான முக்கிய கூரை எரிந்தது.



பல மணிநேர போராட்டங்களுக்குப் பின்னர் தீயணைப்பு வீரர்கள் தேவாலயத்தின் தீயை அணைத்ததுடன், அதிலிருந்த பாரம்பரியப் பொருட்களையும் பாதுகாப்பாக மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## அணுவாயுத சோதனை ...கையில் வடகொரியா





...ச் செல்லும் ...தமொன்றை

...து தொடர்பாக ...ல. ஆனால், ...த் தகவல்கள்

...கள், விமா ...செல்லும் வல் ...றுகின்றனர். ...து தாக்குதல் ...ள்ளதென்றும்

...க ஜனாதிபதி ... நடத்தப்பட்ட ...கொரியா மேற் ... நடவடிக்கை

...ாதக முடிவுக ளையும் எட்டாத நிலையில், அமெரிக்கா சிறந்த அணுகுமுறையுடன் வந்தாலே அடுத்தகட்ட பேச்சுவார்த்தை நடக்குமென வடகொரிய ஜனாதிபதி கிம் கடந்த வாரம் அறிவித்திருந்தார். ஆனால், வடகொரியாவுடனான உறவு சிறந்த நிலையில் காணப்படுவதாக குறிப்பிட்ட ட்ரம்ப், அடுத்த சந்திப்பிற்கு பச்சைக் கொடியும் காட்டியிருந்தார். இந்நிலையில், வடகொரியா தற்போது வழிகாட்டுதல் ஆயுத மொன்றை சோதித்துள்ளது.

எனினும், இந்த சோதனை நடவடிக்கையானது வடகொரியாவின் அணுவாயுத சோதனை நடவடிக்கை தொடர்பான அறிவிப்பை மீறவில்லையென நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (7)


## பற்றியெரிந்த நோட்ரே டேம் தேவாலயம் தீப்பிழம்பின் நடுவே இயேசு கிறிஸ்து

(பாரிஸ்)

பாரிசில் அமைந்துள்ள 850 ஆண்டுகள் பழைமையான நோட்ரே டேம் தேவாலயத்தில் பாரிய தீவிபத்து ஏற்பட்டிருந்தது.

இது உலக மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியது. இந்நிலையில், தீவிபத்தின் போது எடுக்கப் பட்ட புகைப்படம் ஒன்று தற்போது வைரலாக பரவியுள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நோட்ரே டேம் தேவாலயம் தீயில் எரிந்துகொண்டிருந்த போது எடுக்கப்பட்ட குறித்த புகைப்படத் தில் தீப்பிழம்பின் நடுவே இயேசு கிறிஸ்து தோன்றியதாக கூறப்படு



கின்றது.

இது குறித்த புகைப்படங்களை பிரித்தானியாவை சேர்ந்த Lesley Rowan என்ற பெண் வெளியிட்டுள்ளதுடன், தீப்பிழம்பின் நடுவே இயேசு கிறிஸ்து இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இரவுநேரப் பயணங்களின் போது

# பொறுப்புடன் செயற்படுங்கள்

## விபத்தைத் தடுக்க பொதுமக்களுக்கு பொலிஸ் அத்தியட்சகர் ருவான் அறிவுரை



(கொழும்பு)

இரவு நேரப் பயணங்களின் போது சாரதியை மட்டும் முழுமையாக நம்பியிராமல் பயணிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பயணிகளைக் கவனமாக கொண்டு சேர்க்க வேண்டியது சாரதியின் பொறுப்பு என்கின்ற போதும் இரவுப் பயணங்களில் அவருக்கு நித்திரை ஏற்படாமல் அவருடன் கதைத்துக் கொண்டு வரவேண்டியதை பயணிகள் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சாரதிக்கு நித்திரை ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் பயணிகள் இடையிடையே வாகனத்தை நிறுத்தி அவருக்கு தண்ணீர் அல்லது தேநீரை பருகக் கொடுக்க வேண்டுமென்றும் அல்லது அவரது முகத்தை கழுவுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். அதேபோன்று நித்திரை வருமாயின் வாகனத்தை ஓரத்தில் நிறுத்தி ஓய்வெடுத்துச் செல்ல வெண்டியது சாரதிகளின் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய பொலிஸ் பேச்சாளர், அவ்வாறு இடம்பெற்றிருக்குமாக இருந்திருந்தால் மகியங்கனை விபத்தில் பத்து உயிர்களை காப்பாற்றியிருக்கலாமென்றும் தெரிவித்தார். (இ-7)

## சப்ரகமுவ பல்கலைக்கழக

# மருத்துவபீட அபிவிருத்திக்கு சவுதி அரசாங்கம் நிதியுதவி



(றியாத்)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தை முழுமையான வசதிகளையுடைய மருத்துவபீடமாக நிறுவுவதற்கு நிதியுதவிகளை வழங்க சவுதி அரசாங்கம் முன்வந்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தை முழுமையான கருவிகளைக் கொண்டதாக தரமுயர்த்துவதற்கு 187.5 மில்லியன் சவுதி ரியால்களை சலுகைக்கடன் அடிப்படையில் இலங்கைக்கு வழங்க சவுதி அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இத்திட்டம் தொடர்பாக நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க தலைமையில் சவுதிக்கு விஜயம் செய்துள்ள குழுவினர் சவுதி அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போது இவ் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. (இ-7)

# வான் விபத்துக்குள்ளானதில் 9 பேர் வைத்தியசாலையில்



(வட்டவளை)

வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை பகுதியில் காலி பகுதியிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கி சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் 9 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வானில் 9 பேர் பயணித்துள்ளதாகவும் 9 பேரும் காயங்களுக்குள்ளாகி வட்டவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அதில் நான்கு பேர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதோடு, ஐவர் தொடர்ந்தும் வட்டவளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காலி பிரதேசத்தில் மரண வீடொன்றிற்குச் சென்று விட்டு மீண்டும் ஹற்றன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது வானில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

காயமுற்ற 9 பேரில் மூன்று பெண்கள் அடங்குவதாகவும் தெரிவித்த வட்டவளை பொலிஸார் இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இலங்கையை உலுக்கிய விபத்து; பேருந்துச் சாரதியின் வாக்குமூலம்

(மகியங்கனை)

மகியங்கனை தேசிய பாடசாலைக்கு முன்னால் நேற்று முன்தினம் இடம்பெற்ற கோர விபத்து தொடர்பில் பேருந்துச் சாரதி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

திருகோணமலையில் இருந்து தியத்தலாவை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து மற்றும் மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியமையினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் வானில் பயணித்த 10 பேர் உயிரிழந்த நிலையில் இருவர் படுகாயமடைந்து தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். கொழும்பில் உறவினர்களை பார்க்கச் சென்ற இந்த குடும்பத்தினர், நுவரெலியா பிரதேசத்திற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பிற்குச் செல்லும் போது அவர்கள் இந்த விபத்திற்கு முகம்கொடுத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பேருந்துச் சாரதி வழங்கிய வாக்குமூலத்தில்,

"நான் அதிகாலை 1[illegible]ளவில் மகியங்கனை நகரிலுள்ள உணவகம் ஒன்றில் பேருந்தை நிறுத்தினேன். அங்கு தேநீர் அருந்திய பின்னர் மீண்டும் பயணத்தை ஆரம்பித்தேன்.

பயணத்தை ஆரம்பித்து ஒரு சில நிமிடங்களில் அதிக வேகத்துடன் பிழையான பகுதியில் வான் ஒன்று வருவதை அவதானித்தேன்.

நான் முடிந்த அளவு ஓரத்திற்கு பேருந்தை நகர்த்திக் கொண்டு சென்றேன். எனினும் அந்த வான் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நெருங்கி வந்தது.

நொடிப்பொழுதில் இடி விழுந்ததைப் போன்று வான் மோதிச் சென்றது. நான் எவ்வளவு முயற்சித்தும் அதனை தடுக்க முடியவில்லை" [illegible] தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கல்லீரல்

ஒரு பேருந்து நிலையத்தில் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்! பேருந்து வந்ததும் ஓடிப்போய் படியில் ஏறி கம்பியைப் பிடிக்கின்றீர்கள்! உடனே ஒரு ஒலிம்பிக் போட்டியில் ஜெயித்தது போல ஒரு வெற்றிக் களிப்பு உங்கள் முகத்தில்! நீங்கள் பேருந்தைப் பிடிக்க ஓடும் போது உங்கள் தசைகளுக்கு சக்தி தேவைப்படுகின்றது. அந்த சக்தியைக் கொடுப்பதற்கு எரிபொருள் தேவைப்படுகின்றது.

அதற்குக் கல்லீரல் தான் விண்ணப்பம் போட வேண்டும். அது சும்மா இருப்பதில்லை. 24 மணி நேரமும் கிளைக்கோஜன் (Glycogen) எனும் மாச்சத்தை(Starch) கையிருப்பில் வைத்திருக்கு! அதில் சிறிது எடுத்து குளுக்கோசாக மாற்றி இரத்தக் குழாய்கள் மூலம் தசைகளுக்கு அனுப்புகின்றது. அதனாலேதான் நீங்கள் பேருந் தில் ஏறுகின்றீர்கள். இல்லை என்றால் முடியுமா? நின்ற இடத் திலேயே நிற்க வேண்டியதுதான்!

கல்லீரலுக்கு இது மட்டும் தான் வேலை என்று நினைக்காதீர்கள். அது என்னென்ன வேலைகள் செய்யுமென இன்னும் யாரும் முழுசாக கண்டுபிடிக்கவில்லை! ஒவ்வொரு விநாடியும் பல வித்தைகளைச் செய்கின்றதாம்.

இதுவரைக்கும் இது செய்கின்ற 500 இற்கும் மேற்பட்ட வேலைகளைக் கண்டுபிடித்து இருக்கின்றார் களாம்! இன்னும் புதுசு புதுசா கண்டுபிடிக்கிறார்களாம். காலை யில் சாப்பிடும் உணவு வயிற்றுக்குள் போய் உடனே கல்லீரலில் பல சிக்கலான இரசாயன வினைத் தொடர்கள் நிகழ ஆரம்பிக்கும். கல்லீரலில் இருந்து புறப்படும் பித்தநீர், சிறுகுடலுக்கு வருகின்றது. கொழுப்புச் சத்துக்களை ஜீரணம் செய்ய உதவுவது சிறுகுடலில் இருக்கின்ற என்சைம்கள் கொழுப்பை கொழுப்பு அமிலமாக மாற்றுகின்றது. அது கல்லீரலுக்குள்ளே போய் அங்கே உடல் கொழுப்பாக மாற்றப்படுகின்றது.

அதற்குள்ளே இரைப்பையிலும் சிறுகுடலிலேயும் புரதங்கள் அமினோ அமிலங்களாக மாற்றப்படுகின்றது. அந்த அமினோ அமிலங்களை கல்லீரல் பிளாஸ்மா புரதங்களாக மாற்றுகின்றது. அவையெல்லாம் உடம்பிலே திசுத் தசைகள் உருவாகுவதற்குத் தேவை. புரதம் ஜீரணிக்கப்படுகின்ற பொழுது அமோனியா என்னும் நச்சுப் பொருள் உண்டாகின்றது. கல்லீரல் மறுபடியும் தலையிட்டு அமோனியாவை யூரியாவா மாற்றுகின்றது. இந்த யூரியாவை சிறுநீரகங்கள் வெளியேற்றி விடும்.

மனிதன் உட்கொள்ளும் அற்ஹகோல், நிகோடின் போதை மருந்துகள் –இது மாதிரியான நச்சுக்களை சிதைத்து அத்துடன் கேடு விளைவிக்கின்ற தன்மையை குறைக்கின்றது கல்லீரல் தான். இப்படி கல்லீரல் எப்பொழுதும் மிகவும் பிஸி! எங்களுடைய உடம்பிலே இருக்கின்ற சுரப்பிகளில் கல்லீரல் தான் மிகவும் பெரியது! நுரையீரலுக்கு மட்டும்தான் கல்லீரலைவிட அதிக இரத்தம் போகின்றது.

இப்பொழுது எங்களுடைய உடம்பிலே இரத்தத்தினுடைய அளவு கூடிப் போகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். இதயத்திற்கு வேலைச் சுமை அதிகமாகிவிடும். அளவுக்கு மீறி போய் இரத்தம் செலுத்துகின்ற இயக்கமே தடைப்பட்டுப் போகின்ற நிலைமை வந்தால்... கல்லீரல் தன்னுடைய கொள்ளள்வை பெரிதாக்கிக் கொள்ளும். அதிகப்படியான இரத்தத்தை அதற்குள்ளே சேமித்து வைத்துக்கொள்ளும். எங்கள் உடம்பிற்குள் கல்லீரல் மிகவும் முக்கியமான உறுப்பு. அதனால் அது தனக்கு ஏற்படுகின்ற சேதங்களை தானே சரி செய்து கொள்ளும்.

சில புற்றுநோயாளிகள் உடம்பிலே இருந்து 90 சதவீதம் வரைக்கும் கல்லீரலை அறுத்து எடுத்திருக்கின்றார்கள். ஆனால் பாருங்கள்... ஒரு சில மாதத்திற்குள்ளே அது தானாக வளர்ந்து இயல்பான அளவுக்கு வந்துவிடுகின்றது! மிகவும் கடுமையான சேதம் ஏற்பட்டால் தான் கல்லீரல் கோளாறுகளை கண்டு பிடிக்கிறதற்கு மருத்துவத்திலே இப்பொழுது நிறைய வழி முறைகள் எல்லாம் இருக்கின்றன.

கல்லீரலிலே அழற்சி வரலாம்–Hepatitis, கல்லீரலிலே சுருக்கம் வரலாம்–Cirrohsis கோளாறு எப்படி இருந்தாலும் சிகிச்சை முறை ஒன்றுதான். மது அருந்தக்கூடாது. முழு ஓய்வு வேண்டும். புரதச் சத்து, பி.விற்றமின்–இது அதிகமாக இருக்கின்ற சத்துணவு சாப்பிட வேண்டும். நல்ல பழக்க வழக்கம் –நல்ல ஆகாரம்...இது இருந்தால் எந்த வியாதியும் கிட்ட நெருங்காது. கல்லீரலில் கோளாறு இருந்தால் களைப்பு, தளர்ச்சி, மனக்குழப்பம், குமட்டல் எல்லாம் இருக்கும். ஈரல் வீங்கி இருப்பதை அறிய நோயாளியை படுக்கப் போட்டு வயிற்றில் அழுத்திப் பார்ப்பார்கள்.

ஒரு வைத்தியர் தலைவலி என்று போனவரைக் கூட, அவரைப் படுக்க வைத்து வயிற்றை அழுத்திப் பார்ப்பார். என்னப்பா இது எந்த வியாதியாக இருந்தாலும் வயிற்றை அழுத்திப் பார்த்தால் கண்டு பிடித்து விடலாமா? என்று கேட்டேன். நான் வயிற்றை அழுத்துவது வியாதியை கண்டுபிடிக்க அல்ல... மடியில் பணம் இருக்கின்றதா? என்பதைக் கண்டு பிடிப்பதற்காக என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு குடும்பப் பின்னணி அவசியமில்லை-அமைச்சர் ஹரின்

(நுவரெலியா)

அரசியலுக்கு குடும்பப் பின்னணி அவசியமில்லை எனவும் நபரே அதற்கு அவசியம் எனவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நுவரெலியா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் சம்பந்தமாக



கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதி இறுதியான பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் குறித்த தகவல் வெளியிடப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் அரசியலில் ஈடுபட குடும்பப் பின்னணி தேவையில்லை. அதற்குத் தகுதியான நபரே தேவைப்படுகிறார். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் நம்பிக்கை கொள்ளக் கூடிய எந்தக் கட்சியிலாவது போட்டியிடுவது முக்கியமானது எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். (இ-7)

# இம்ரானிடமிருந்து வெளியாகும் தகவல்களுக்கு மேலிட அழுத்தம்



(கொழும்பு)

மதூஷின் நெருங்கிய சகாவான கஞ்ஜிபான இம்ரானிடம் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளில் வெளியாகும் முக்கிய தகவல்களை வெளியிட வேண்டாம் என உயர் மட்டங்களிலிருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக பொலிஸ் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மதூஷ் டுபாயில் இருக்கும் போது சில அரசியல்வாதிகள் டுபாய் சென்று அவருடன் விருந்துபசாரங்களிலும் கலந்துகொண்டுள்ளமை இம்ரானிடம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மதூஷ்டன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் பலர் குறித்தும் இம்ரானிடமிருந்து முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்மட்ட அழுத்தங்களினால் எதிர்காலத்தில மதூஷ் மற்றும் கஞ்ஜிபான இம்ரான் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள், இருட்டடிப்புச் செய்யப்பட வாய்ப்புக்கள் உள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச் செயல்களுடன் தொடர்புள்ளவர்களை சிறைப்படுத்துவதுடன் மாத்திரம் விசாரணைகள் நிறைவடையுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# மகியங்கனை விபத்தில் கைது செய்யப்பட்ட பேருந்துச் சாரதி பிணையில் விடுவிப்பு

(மகியங்கனை)

மகியங்கனை நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தின் போது கைது செய்யப்பட்ட தனியார் பேருந்துச் சாரதி மகியங்கனை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

மேலும் குறித்த சாரதியை எதிர்வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டார். நேற்று முன்தினம் அதிகாலை 1.35 மணியளவில் மகியங்கனை தேசிய கல்லூரிக்கு முன்பாக பதுளை பிரதான வீதியில் பாரிய விபத்து இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தங்க ஆபரண கடையில் கொள்ளை

(அம்பலாங்கொட)

அம்பலாங்கொட பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள தங்க ஆபரணக் கடை ஒன்றில் இருவர் கொள்ளையடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர். நேற்று முன்தினம் மாலை 05.45 மணியளவில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முதலில் வந்த ஒருவர் தங்கச் சங்கிலிகளை கொள்வனவு செய்வது போல் பார்வையிட்டுள்ளதுடன் பின்னர் மற்றொருவர் முகத்தை மறைத்துக் கொண்டு துப்பாக்கியுடன் வந்து ஊழியர்களை அச்சுறுத்தி விட்டு தங்கச் சங்கிலிகளை கொள்ளையடித்துக் கொண்டு இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். 6 தங்கச் சங்கிலிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றின் பெறுமதி சுமார் 4 இலட்சம் ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## பகிரங்க ஏல அறிவித்தல்

### பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி
### 2019 ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம்

மந்திகை மாட்டிறைச்சிக்கடையினை 26.04.2019 ஆம் திகதி பகிரங்க ஏலம் மூலம் 01.05.2019 ஆம் திகதியிலிருந்து 31.12.2019 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக 26.04.2019 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள ஏலத்தில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

ஏலத்தின் போது குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகையாளர், குத்தகை கேள்வித்தொகையின் 1/3 பாதுகாப்பு வைப்புப் பணத்தினை அன்றையதினமே (26.04.2019 ஆம் திகதி) பி.ப. 3.30 மணிக்கு முன்னர் புலோலி உப அலுவலகத்தில் செலுத்தி, குத்தகை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

| இல | சந்தை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 | மந்திகைச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 834,000.00 |

அன்றைய தினம் (26.04.2019 மு.ப. 10.00 மணிக்கு முன்னர் ரூபா 5000.00 இனை, தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதியுடன் தலைமை அலுவலகத்தில் செலுத்தி, அதற்கான அனுமதியை பெற்றுக்கொண்ட பின்னரே ஏலத்தில் பங்குபற்ற வேண்டும். தங்களால் வேறு பிரதேச சபையில் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு பெறப்பட்டிருப்பின் அதற்கான அத்தாட்சிப்படுத்தலையும் குறித்த பிரதேச சபையில் நிலுவைகள் எதுவும் இல்லை எனவும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி


# நதீமலிடம் வாக்குமூலம்



(கொழும்பு)

சிங்களப் பாடகர் அமல் பெரேராவின் மகன் நதீ மல் பெரேரா குற்றப்புலனாய்வு பிரிவிலிருந்து வெளி யேறியுள்ளார்.

அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதைத் தொடர்ந்து அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

அவர் நேற்று வியாழக்கிழமை காலை கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எண்ணிக்கை அதிகரிப்பு

# நாடு கடத்தப்பட்ட இருவர் கட்டுநாயக்கவில் கைது!

(கொழும்பு)

பிரபல போதைப்பொருள் வர்த்தகரும் பாதாள உலகக் கோஷ்டியின் தலைவனுமான மாகந்துரே மதூஷுடன் கைது செய்யப்பட்ட மேலும் இருவர். டுபாயில் இருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த இருவரும் யு.எல். 226 எனும் விமானத்திலேயே நாடு கடத்தப்பட்டனர். அந்த விமானம், நேற்று அதிகாலை 5.55 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. கட்டுநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட, பியல் புஷ்ப குமார, மொஹமட் அஸ்ரிஃ மொஹமட் இன்ஹாம் ஆகிய இருவரிடமும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)

# தொழிற்சாலையில் தீ!

(பன்னிப்பிட்டிய)

பன்னிப்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டடமொன்றில் நேற்றுக்காலை திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, அக்கட்டடம் எரிந்து நாசமாகியுள்ளது. கடதாசிப் பைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையிலேயே, இத்தீ விபத்து ஏற்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் தெஹிவளை மற்றும் கோட்டை மாநகர சபை தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)




யாழ்ப்பாண பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் தர்ஷன ஹெட்டியாராச்சியின் எண்ணக்கருவிற்கு அமைய கபில சில்வாவின் நிதியுதவியுடன் யாழ்.அரியாலைப் பிரதேசத்தில் 150 பேருக்கும் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் வசிக்கும் 150 பேருக்கும் மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

05



**மூக்கரைப் பாதுகாப்பு**

(1)முற்கரையைப் (foreshore) பாதுகாத்தலும் அதனைப் பேணலும் அதன் பொறுப்பும் கட்டளைச் சட்டத்தின் 58ஆம் பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுளது. முற்கரை என்பது இலங்கைத்தீவின் வற்றுக் பெருக்குக்கு இடைப்பட்ட கரை என கட்டளைச் சட்டத்தின் 110(1) பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. முற்கரையைச் சேர்ந்த பகுதி எது என்பதும் அதனை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்பதும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (land manual).

(2)1981 ஆம் ஆண்டு 57 ஆம் இலக்க கடற்கரைப் பாதுகாப்புச் சட்டத்தின் பொருள் கோடலின்படி முற்கரை என்பது இடைப் பெருக்கு நீர் எல்லைக்கும் இடைவற்று நீர் எல்லைக்குமிடைப்பட்ட கடற்கரைப் பிரதேசமாகும். கரைவலயம் என்பது கடற்கரைப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பெருக்கு நீர் இடை எல்லையிலிருந்து உள்நாட்டினுள் 300 மீற்றர் எல்லையையும் வற்று நீர் எல்லையிலிருந்து கடலினுள்ளே 2 கிலோ மீற்றர் எல்லைக்குள்ளும் அமைந்த பிரதேசமாகக் கருதப்படும்.

(3)கடற்கரைப் பாதுகாப்புச் சட்டத்தின் 14ம் பிரிவின்படி கடற்கரைப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்தினால் அக் கருமம் தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் கீழன்றி எந்த ஆளும் கரை வலயத்தினுள் எந்த அபிவிருத்தி வேலையிலும் ஈடுபடக் கூடாது. ஆகையினால் ஏதாவதொரு விண்ணப்பதாரருக்கு ஏதாவதொரு அபிவிருத்திக்காக நீண்டகாலக் குத்தகைக்காகக் கேட்கின்ற காணித்துண்டு கரை வலயத்தினுள்ளே வருவதாயிருந்தால் அரசாங்க அதிபர்/பிரதேச செயலாளரால் அவ்வாறு குத்தகைக்கு வழங்க விதந்துரைக்க முன்னர் கரைப்பாதுகாப்புத் திணைக்களத்தின் இணக்கத்தைப் பெற வேண்டும்.

> முற்கரைப்பிரதேசத்தில் (foreshore). குறிப்பாக வடமேல் மற்றும் தென் மாகாண முற்கரைப்பிரதேசத்தில் அத்துமீறிக் கட்டப்பட்ட (ஹோட்டல்கள் உட்பட) கிட்டத்தட்ட 1500 கட்டடங்களை இடித்து அகற்றுவதற்கு கரைப்பாதுகாப்புப் பணிப்பாளரினால் அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

(4)கடற்கரைப் பாதுகாப்புச் சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் முற்கரையிலோ அல்லது கரைவலயத்தினுள் அமைந்த கடலடியில் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதற்கு 3 வருடத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் கடற்கரைப்பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்துக்கோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிக்கோ உரிமையளிக்கப்பட்டுள்ளது. இதன்படி அந்த எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கடலுக்கடியில் மணற்கல்லையோ வேறு பொருளையோ தோண்டியெடுத்தலுக்காக கரைப்பாதுகாப்புப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

முற்கரைப்பிரதேசத்தில், குறிப்பாக வடமேல் மற்றும் தென் மாகாண முற்கரைப்பிரதேசத்தில் அத்துமீறிக் கட்டப்பட்ட (ஹோட்டல்கள் உட்பட) கிட்டத்தட்ட 1500 கட்டடங்களை இடித்து அகற்றுவதற்கு கரைப்பாதுகாப்புப் பணிப்பாளரினால் அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

**முற்கரையின் பகுதிகளை இலங்கை உல்லாச பயணச் சபைக்கு உரிமையளித்தல் (land manual).**

சட்ட சாசனத்தின்படி முற்கரையின் நிர்வாகம் அரசிடம் உரிமையளிக்கப்பட்டுள்ளது. ஆகவே எக்காரணம் கொண்டும் முற்கரையின் எந்த ஒரு பகுதியையும் 61, 62 ஆம் பிரிவுகளில் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ள விதத்திலன்றி வேறு விதத்தில் அரசினால் உரிமை மாற்றவோ வேறோர் சபைக்கு உரிமையளிக்கவோ முடியாது. இது மட்டுமன்றி அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் குத்தகைக்கு விட முன் அதற்காக கடற் கரைப்பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்தினதும் நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் ஒப்புதலைப் பெற வேண்டும். அவ்வாறு இருப்பினும் வர்த்தமானியில் பிரசுரிக்கின்ற கட்டளை மூலம் அக் கட்டளையிலே குறிப்பாகக் காட்டப்பட்டுள்ள முற்கரையின் எந்தப் பகுதியினதும் நிர்வாகமும் கட்டுப்பாடும் பொறுப்பும் அதனைப் பேணலும் அரச காணி சம்பந்தமான கருமத்துக்கு அல்லது அவ்விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் அனுமதியுடன் இலங்கை உல்லாசப் பயணச் சபைக்கு உரிமையளிக்க 1968 இன் 14 ஆம் இலக்க உல்லாசப் பயண அபிவிருத்திச் சட்டத்தின் 1ஆம் பகுதியின் 11 ஆம் பிரிவின் மூலம் அச் சட்டத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரம் அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ளதால் அக்கட்டளை செல்லுபடியாகும் வரை முற்கரையின் அப் பகுதியை நிர்வாகம் நடத்தும் கட்டுப்படுத்தும் பாதுகாக்கும் பொறுப்பு அதனைப் பேணும் கருமமும் அச் சபையின் பொறுப்பில் முற்றாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

13. சுற்றுலாத்துறைச் சட்டம் 2005 - இல.38

1966 ஆம் ஆண்டில் அரசாங்கம் சுற்றுலாத்துறையில் ஒரு நிறுவன கட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கான தேவையை கண்டறிந்த பின்னர், ஒரு திட்டமிட்ட முறையில் சுற்றுலாவை அபிவிருத்தி செய்ய முடிவு செய்தது. இலங்கை சுற்றுலாச் சபை. 1966 ஆம் ஆண்டின் இல.10 இலங்கை சுற்றுலாச் சபை சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது. அதுபோல் இலங்கை ஹோட்டல்கள் கார்ப்பரேஷன், 1966 இல் சிலோன் ஹோட்டல்கள் கார்ப்பரேஷன் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது.

வெளிநாட்டு சுற்றுலா வளர்ச்சியின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக 1968 இல் இயற்றப்பட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்திச் சட்டம், இலங்கை சுற்றுலாச் சபைக்கு ஒரு திட்டமிட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் சுற்றுலாவை வளர்க்க சட்டரீதியான (statutory) அதிகாரத்தை வழங்கியதோடு ஏதும் விடயங்களில் முடிவெடுப்பதில் அதிக சுதந்திரம் மற்றும் நிதி நிர்வாகத்தில் நெகிழ்வுத்தன்மை போன்றவற்றை அனுமதித்தது.

இச் சட்டம், சுற்றுலா அபிவிருத்தி நோக்கங்களுக்காக இழப்பீடு மூலம் காணியைப் பெற இலங்கை சுற்றுலா சபையை அனுமதித்தது. இச் சட்டத்தின் மூலம் சுற்றுலா ஹோட்டல்களைப் பதிவு செய்தல் மற்றும் வகைப்படுத்தல், நெடுஞ்சாலைகள் மற்றும் எழில்மிகு இடங்களின் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரங்களை வழங்கியது.

**சுற்றுலா அபிவிருத்தி பகுதி**

1968 இன் 14 ஆம் இலக்க உல்லாசப் பயண அபிவிருத்திச் சட்டத்தின் 4(1) பிரிவின் கீழ் இலங்கை உல்லாசப் பயணக் கூட்டுத்தாபனத்துக்கு அரச காணி ஒன்றை பராதீனம் செய்ய அச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பாகவும் முன்னர் குறிப்பிட்ட நடைமுறையை ஒத்த நடவடிக்கை ஒன்று பின்பற்றப்பட வேண்டும். இங்கு இதற்குப் பொறுப்பான அமைச்சரானவர் உல்லாச பயண நடவடிக்கைக்கு பொறுப்பான அமைச்சராவார். எடுக்க உத்தேசித்திருக்கும் காணியை நில அளவைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற நில அளவையாளரைக் கொண்டு அளக்கச்செய்து வரைபடத்தைத் தயாரித்துக் கொள்ள மேற்கூறிய சட்டத்தின் 5வது பிரிவிலே இலங்கை உல்லாசப் பயண கூட்டுத்தாபன தலைவருக்கு அதிகாரம் உண்டு. (land manual).

50 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்த 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை சுற்றுலாச் சபைச் சட்டத்திற்கு பதிலாக 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம் (The Tourism Act) ஒக்டோபர் 2007 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

> சுற்றுலாத்துறைச் சட்டம் -2005 இல. 38ன் பிரிவு 26இன் படி, சுற்றுலா அதிகார சபைக்கு ஒரு சுற்றுலா அபிவிருத்தி பகுதி தேவைப்படும்போது அதிகாரசபையின் பரிந்துரையின் பேரில் அமைச்சரால் அப்பகுதி ஒரு சுற்றுலா அபிவிருத்தி பகுதி என பிரகடனம் செய்யலாம்.

சுற்றுலாத்துறைச் சட்டம் 2005-இல.38 இன் பிரிவு 26இன் படி, சுற்றுலா அதிகார சபைக்கு ஒரு சுற்றுலா அபிவிருத்தி பகுதி தேவைப்படும்போது அதிகாரசபையின் பரிந்துரையின் பேரில் அமைச்சரால் அப்பகுதி ஒரு சுற்றுலா அபிவிருத்தி பகுதி என பிரகடனம் செய்யலாம்.

பிரிவு 26இன் படி பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி 10 வருட காலத்திற்கு சுற்றுலா அதிகார சபைக்கு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கையுதிர்த்தல் (vesting) செய்யப்டும்.

கையுதிர்த்தல் செய்ய முன் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச் சூழல் சட்டம் (National Environmental Act, No. 47 of 1980) மற்றும் தொன்மைக் கட்டளைச் சட்டம் (188 ஆம் அத்தியாயம்) (Antiquities Ordinance (Chapter 188)) ஆகிய சட்டங்களுக்கு அமைவாக அனுமதி பெறப்படல் வேண்டும்.

**14.நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணிகள்**

நகர பகுதிகள் மற்றும் பகுதி வாழ் மக்களின் பொருளாதாரம். சமூக மற்றும் பௌதிக அபிவிருத்தியினை முன்னெடுப்பதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களை முன்வைப்பதே நகர அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய குறிக்கோளாகும். இலங்கை முழுவதும் 22 பிரதேச மற்றும் மாவட்ட அலுவலங்களைக் கொண்ட ஒரு பரவலான நிறுவனமாக நகர அபிவிருத்தி அதிகார சபை அமைந்துள்ளது.

**நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரச் சபைச்சட்டம் 1978 இல் இல. 41. (Urban Development Authority Law)**

இச் சட்டம் நகர்ப்புற அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் ஏதும் பிரதேசமொன்றைப் பிரகடனப்படுத்தியதும் அப்பிரதேசத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்களை மேம்படுத்தவும் பொருளாதார, சமூக, பௌதிக அபிவிருத்தித்திட்டங்களைச் செயற்படுத்தவும் தேவையான நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரச்சபை தாபிப்பது தொடர்பாகவும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான சட்டம் ஆகும். இச் சட்டம். 1979, 1980,1982, 1984, 1987, 1988, 2007, 2019 ஆகிய வருடங்களில் திருத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

**நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு காணி பெற்றுக் கொடுத்தல்.**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தேவைகளுக்காக, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ், அரச காணிகள் சபையிடம் கைமாற்றப்படுகிறது. அபிவிருத்தி செய்யப்படும் பகுதியை வர்த்தமானியில் விளம்பரப்படுத்தல் உச்சக்கட்டப் பொருளாதார பயன்பாட்டிற்கு சிறந்த பௌதிக சுற்றாடலை வழங்குதல்.

அதிகார சபையிடம்ஒப்படைக்கப்பட்ட காணிகளை பொதுமக்களின் வீடமைப்பு மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக, விலைக்கோ, குத்தகைக்கோ, வாடகைக்கோ அல்லது வாடகை கொள்வனவு முறையில் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை தேவைகளாக குறிப்பிடலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

225

தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை கருத்திற்கு எடுக்காது தேசாதிபதி இந்தச் செயலைச் செய்துள்ளதனால் மக்களின் விருப்பத்திற்கிணங்க ஒரு பிரதிநிதியை நாம் தெரிவு செய்வதற்கான வழிவகையை நாம் ஏற்படுத்துவது முக்கியமானதாகவும் அவசியமானதாகவும் உள்ளது.

தமிழர் குடியேற்ற அரசாங்கத்தையும் தமது அபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் ஒரு தமிழ்ப் பிரதிநிதியை நியமனம் செய்த அவர்களுடைய பொருத்தமற்ற தீர்மானத்தையும் திடமாக எதிர்த்தனர் என்பதற்கு இது முக்கிய சான்றாகும்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காகப் போராடவும் அச்சமின்றி அரசாங்கத்தை வெளியரங்கமாகக் கண்டனஞ் செய்யவும் ஆயத்தமாயிருந்தனர் என்பதை இது மீண்டும் தெளிவாகக் காட்டுகின்றது.

இந்த வகையான அரசியல் சூழலும் மனநிலையுமே அண்மிய எதிர்காலத்தில் தமிழ்த் தேசியவாதம் தோன்றுவதற்கு வழிவகுத்தன.

இந்தியா தனது சட்ட நிருபண சபையில் நலனடைந்தது போல் எதிர்காலத்தில் தமிழரும் தமது அரசியல் விடயங்களையிட்டுத் தாமே தீர்மானிக்கும் வகையில் தாம் ஒரே சமூக மாக ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை இப்போது உணர்ந்தனர் என்பதையும் இதே ஆசிரியர் தலையங்கம் கூறியது.

சட்ட நிருபண சபைக்கான தமது பிரதிநிதியைத் தாமே தேர்ந்தெடுக்கும் சலுகையை இந்தியர் வென்றெடுத்துள்ளனர். துரதிர்ஷ்டவசமாக எம்மிடையே முயற்சியும் ஒற்றுமையும் இல்லாத காரணத்தினால் அதே சலுகையை நாம் பெறவில்லை. எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க தமிழர் என்ற ரீதியில் நாம் ஒன்றிணைந்து கடுமையாக உழைத்தல் வேண்டும்.

தமிழர் தமது அரசியல் உரிமைகளை வெல்வதற்கு ஒன்றிணையத் தயாராய் இருந்தனர் என்பது மாத்திரமன்றி அவர்கள் தமது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்க இந்திய அரசியல் வளர்நிலைகளை முன்மாதிரியாகக் கொள்ள ஆரம்பித்தனர் என்பதையும் எம்மால் காணமுடிகின்றது.



றொக்வூட்

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

இந்த வகையிலான அரசியல் உணர்வு இலங்கையின் எந்தவொரு அரசாங்கத்திற்கும் நிச்சயம் ஒரு பெரும் சவாலாக இருந்து பின்னர் அதுவே தமிழ்த் தேசியவாதம் தோன்றுவதற்கு வழிவகுத்தது.

தமிழரின் அரசியல் நிலைமையை மோசமாக்க மட்டுமே வழிசெய்யும் வகையில் தேசாதிபதி பின்னர் றொக்வூட்டை (தனது ஐந்துவருட பதவிக்கால முடிவுக்கு வந்துவிட்டிருந்தார்) மேலும் ஓர் ஐந்துவருட காலத்திற்கு தமிழ்ப் பிரதிநிதியாக நியமனம் செய்தார். இது நிச்சயமாக, ஒருவர் இப் பதவியில் ஐந்து வருடங்களுக்கு மட்டுமே இருக்க முடியும் என்ற அவர்களது சொந்தக் கொள்கைக்கு எதிராக இருந்தது.

தேசாதிபதி ஏற்கனவே தங்கள் விருப்பங்களை அசட்டை செய்து இருந்தார். தேசாதிபதி ஏற்கனவே தங்கள் விருப்பங்களை அசட்டை செய்து உயர்மட்டத்தினர் சட்ட நிருபண சபைக்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதியை முன்மொழிவதில் ஆர்வம் காட்டியிருந்தனர்.

பின்னர் தேசாதிபதி டபிள்யூ. என்.எஸ். அசரப்பாவை றொக்வூட்டின் இடத்திற்கு 4 மாத காலத்திற்கு நியமித்து தமிழர்களின் விரோதத்தை அதிகரித்தார்.றொக்வூட் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக நான்கு மாதங்கள் வெளிநாடு சென்றிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பாரதூரமான பிரச்சினையாகி விட்ட இந்த விடயத்தையிட்டு தமிழர் அரசாங்கத்திற்கு எதிராகப் பலத்த குரலில் போராடினர். இறுதியாக 1904 இல் தமிழ் மக்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்றிருந்த ஏ.கனகசபை என்பவரை தமிழ்ப் பிரதிநிதியாகத் தேசாதிபதி நியமித்தார்.

கனகசபை ஒரு சைவராக மட்டும் இருந்ததல்லாது யாழ்ப்பாணக் குடும்பம் ஒன்றில் உதித்தவரும் ஆவார். ஆனால் இதுவரை தமிழ்ப் பிரதிநிதிகளாக இருந்த யாவருமே கொழும்பைத் தளமாகக் கொண்ட தமிழ் உயர் மட்டத்தினராவார். தமிழரின் கேந்திர நிலையமான யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாகவே சபைக்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதி நியமிக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

கொழும்பைத் தளமாகக் கொண்ட உயர் மட்டத்தினரின் முக்கியத்துவம் இப்போது குறைந்து யாழ்ப்பாண உயர் மட்டத்தினர், தமிழ் அரசியல் விடயங்களில் முன்னிடம் வகித்ததை இது காட்டியது.

எவ்வளவு தான் முக்கி யமும் பிரபலமும் பெற்றிருந்த போதும், எவ்வளவு தான் அரசாங்கத் துடன் நெருக்கமான தொடர் புகளைக் கொண்டிருந்த போதும் தமிழரின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் நிலையில் கொழும்பு வாழ் உயர்மட்டத்தினர் மேலும் இருக்க வில்லை எனத் தெரிகின்றது.

இதற்குப் பதிலாக வட மாகாண உயர் மட்டத்தினரே தமிழரின் அரசியல் எதிர்காலம் எடுக்க வேண்டிய பாதையைத் தீர்மானிப்பவர்களாய் இருந்தனர். இந்த அரசியற் சூழ் நிலைகளில் இருபதாம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்களிலும் கொழும்பு வாழ் உயர் மட்டத்தினரின் ஆதரவோடு, வட மாகாண உயர் மட்டத்தினர், தமது அரசியல் உரிமைகளுக்காக மேலும் போராடி, ஈற்றில் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் கோருமளவுக்குச் சென்றுள்ளனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி தெற்கில் மணல் கொள்ளை

## அதிகாரிகள் அசமந்தம்



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு அறுகுவெளிப் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் கொள்ளை இடம்பெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இப் பகுதிகளில் பகல் மணல் கொள்ளையில் ஈடுபடுவோர் இரவு வேளையில் விற்பனை நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிவருகின்றனர்.

இவ் விடயம் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் எழுத்து மூலம் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே அரச அதிகாரிகள் இனியாவது தங்கள் கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்ற முன்வருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரிப் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாகப் பொதுமக்கள் அடிக்கடி தனக்கு முறைப்பாடு செய்ததாகவும் இவ் விடயம் தொடர்பில் பல முறை பொலிஸாருக்கும் விசேட அதிரடிப்படைக்கும் தகவல் வழங்கப்பட்டும் மணல் கடத்தல் தடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (இ-10)

# வயலுக்குச் சென்ற விவசாயியை இழுத்துச் சென்ற இராட்சத முதலை

## அதிர்ச்சியில் குடும்பத்தினர்

(நாவிதன்வெளி)

வயலுக்குச் சென்ற விவசாயியை இராட்சத முதலை இழுத்துச் சென்றமையால் அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

நாவிதன்வெளி வீரச்சோலை கிராமத்தைச் சேர்ந்த ச.கந்தசாமி (வயது - 51) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தனது வயற்காணியைப் பார்வையிட்டு தனக்கு சொந்தமான பிறிதொரு வயற்காணிக்கு நீர் பாய்ச்சுவதற்காக 4 ஆம் கிராமம் அணைக்கட்டை கடப்பதற்கு முற்பட்ட வேளை முதலை தாக்கிப் பலியாகியுள்ளார்.

இதேவேளை, இரண்டு மணி நேரமாக பிரதேசவாசிகளின் தேடுதலின் பின்னரே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மத்தியமுகாம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், உயிரிழந்த விவசாயியின் குடும்பத்தினர் அதிர்ச்சியில் பரிதவித்து வருகின்றனர். (இ-7)

# வழிப்பறிக்கொள்ளையன் கைது ஆறு தொலைபேசிகள் மீட்பு

## ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு



(கரணவாய்)

வடமராட்சியின் பல பகுதிகளில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வந்த பிரதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து தொலைபேசிகள், ஆவணங்கள் மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வடமராட்சி உள்ளிட்ட பல பகுதிகளில் கொள்ளையிடப்பட்ட ஆறு தொலைபேசிகள், அடையாளஅட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம், வெளிநாட்டு வங்கி அட்டைகள் என்பன மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் முடக்காடு, கரவெட்டியைச் சேர்ந்த புலேந்திரன் தர்சிகா, கதிர்காமலிங்கம் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், மயிலிட்டியைச் சேர்ந்த விஜயகாந்தன் விஜயதாஸ் என்பவரது தேசிய அடையாள அட்டையும் அவரது கனடா நாட்டின் ஆவணங்களும் உள்ளன.

இவற்றை வழிப்பறி கொள்ளையரிடம் பறி கொடுத்தோர் ஆதாரத்தைக் காட்டி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-60)

# அமெரிக்கக் குடியுரிமை குறித்து கோத்தபாய சொல்வது பொய்!



(கொழும்பு)

அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளமை முற்றிலும் பொய் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இன்னமும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

தமது அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளதாக கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். அது முற்றிலும் பொய்யானது. அவர் குடியுரிமையை இரத்துச்செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்திருந்தால் அமெரிக்கக் கடவுச்சீட்டில் இலங்கைக்கு வரமுடியாது. அவர் அமெரிக்காவுக்குச் சென்றதும் அந்நாட்டு கடவுச் சீட்டில் தான். இங்குவந்ததும் அதே கடவுச் சீட்டிலேதான்.

ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் கடவுச்சீட்டையும் வழங்க வேண்டும் என்பதுதான் அங்குள்ள குடியுரிமைச் சட்டம். குடியுரிமையை இரத்துச் செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை எவர் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்.

அமெரிக்காவை வெறுமனே விமர்சனம் செய்யும் பசில், கோத்தா போன்றோர் அந்நாட்டுக் குடியுரிமையை வைத்துக் கொண்டு போலியான நாட்டுப்பற்றை வெளிப்படுத்தி வருகின்றனர் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள்தான் 2007 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டிருந்தனர். அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிக்கொள்ள அவர்களுக்கு உண்மையில் விருப்பம் இல்லை என்பதுதான் உண்மை.

இதேவேளை, 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போனால் கல்வியியலாளர்கள், கலைஞர்கள், சிவில் அமைப்புக்கள் உட்பட நாட்டின் பலதரப்பினரையும் இணைத்து பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்து ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை ஜே.வி.பி. களமிறக்கும். அவ்வாறான சூழலில் ஜனாதிபதித் தேர்தலானது முத்தரப்புப் போட்டியாக மாறும் என்பதுடன் எந்தவொரு தரப்பாலும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நெல்லியடி நகரில் கழிவுகள் தேக்கம்



கரவெட்டி பிரதேசசபையின் பொறுப்பற்ற கழிவகற்றல் செயற்பாட்டால் நெல்லியடி நகரில் துர்நாற்றம் வீசுவதாக பொது மக்களாலும் வர்த்தகர்களாலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களாக நெல்லியடி நகரில் கழிவுகள் அகற்றப்படாது அப்படியே காணப்படுகிறது.

கரவெட்டி பிரதேசசபையினர் வர்த்தகர்களிடம் கழிவகற்றலுக்கு என காலாண்டுக்கான பணம் பெற்று அதற்கான இலச்சனைகள் பணம் கொடுத்தவர்களின் வர்த்தக நிலையங்களில் ஒட்டியும் உள்ளனர்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாக நெல்லியடி நகர் காணப்படுகின்ற போதிலும் கரவெட்டி பிரதேச சபையினர் கழிவுகளை அகற்றுவதில் அதிக அக்கறை காட்டுவதில்லையென பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (S-60)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக 2017 இல் 12,093 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துக்கு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கடந்த 2017 ஆம் ஆண்டு மாத்திரம் 12,093 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென, அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்குரிய செயற்றிறன் அறிக்கையிலேயே இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 1,187 முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்திலிருந்தும் இரண்டாவதாக குருநாகல் மாவட்டத்திலிருந்து 1,084 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில், 2017 ஆம் ஆண்டு முல்லைத்தீவு, பொலநறுவை மாவட்டங்களிலிருந்து எவ்வித முறைப்பாடுகளும் நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடுகள் கடிதம், தொலைபேசி, அநாமதேய அழைப்புக்கள் மூலம் கிடைத்துள்ளதென்றும் இந்த முறைப்பாடுகள் தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள், சட்ட நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்ட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

## பண்டிகைக் காலத்தில்

# அதிவேக நெடுஞ்சாலைகளால் 345 மில்லியன் ரூபா வருமானம்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டதன் பின்னர் பண்டிகைக்காலத்தில் அதிக வருமானம் இவ்வருடம் ஈட்டப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை நடத்துதல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 5 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 345 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வருமானமானது கடந்த வருடத்தை விட 10 வீத அதிகரிப்பாகும்.

குறித்த காலப்பகுதிக்குள் 13 இலட்சம் வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை ஒருநாளில் பெறப்பட்ட அதிக தொகையாக கடந்த 11 ஆம் திகதி 30 மில்லியன் ரூபாய் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண க.பொ.த. (சா/த) பரீட்சை அடைவு மட்டம் 2015 இல் இருந்து வளர்ச்சிப் போக்கில்

வட மாகாணத்தின் கல்வி நிலை இன்று மக்கள் மத்தியில் முக்கிய பேசுபொருளாக விளங்குகின்றது. 1990களுக்கு முன்னர் நாட்டின் கல்வி நிலையில் முன்னிலையிலிருந்த வட மாகாணம் இன்று பின்னிலையில் இருக்கின்றது. ஒரு பாடசாலையின் அல்லது மாவட்ட, மாகாணத்தின் கல்வி நிலை பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே பொதுவாக கணிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண 2018 க.பொ.த (சா/த) அடைவு மட்டம் தேசிய அடைவு மட்ட நிலைக்குக் கீழ் இருந்தாலும் பல்வேறு கல்விசார், பாட சாலை நிர்வாகம்சார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, மாணவர்களின் கல்வி நிலை, பரீட்சை அடைவு மட்டத்தை மேலும் கீழ் நிலைக்குச் செல்லாது தடுத்து அவற்றை வளர்ச்சிப் போக்கில் முன்னெடுத்து வருகின்றோம் என்பது இன்றைய வடக்கு மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகளின் நிலைப்பாடு ஆகும்.

2015 ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த (சா/த) பரீட்சை அடைவு மட்டம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அதிகரிப்பை நோக்க முன் முதலில் தேசிய, மாகாண, மாவட்ட அடிப்படையில் க.பொ.த (சா/த) பரீட்சை அடைவு மட்டங்கள் குறித்து மாகாண நிலையில் நோக்குவது வடமாகாண பரீட்சை அடைவைத் தெளிவாக விளக்க உதவும்.

அட்டவணை I இல் தேசிய ரீதியில் 2018 க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறு விபரங்கள் அடைவு மட்டங்கள் காட்டப்பட்டுள்ளன.

2018 பரீட்சையில் மொத்தமாக 518,184 பரீட்சார்த்திகள் பரீட்சை எடுத்துள்ளனர். இவர்களுள் 296,192 பரீட்சார்த்திகள் முதன்முறையாகப் பாடசாலை மூலம் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்களுள் 75.09% க.பொ.த (உ/த) கற்கத் தகுதி பெற்றுள்ளனர். மேலும் இவர்களுள் 9266 பேர் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் பாடசாலையில் இருந்து முதலாம் முறையாகவும் அதற்கு மேலதிகமாகவும் பாடசாலையிலிருந்து தோற்றியோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விபரங்கள் யாவும் அட்டவணை I இல் தரப்பட்டுள்ளன.

| மாகாணம் (2017) | | 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி | | சகல பாடத்திலும் சித்தி பெறாதவர்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | எண் | வீதம் | எண் | வீதம் |
| 01 | தெற்கு | 36,225 | 28,768 | 79.41 | 447 | 1.23 |
| 02 | வடமேற்கு | 34,752 | 25,926 | 74.60 | 624 | 1.80 |
| 03 | மேற்கு | 78,708 | 58,704 | 74.58 | 2,093 | 2.66 |
| 04 | சப்ரகமுவ | 26,945 | 20,028 | 74.33 | 727 | 2.70 |
| 05 | மத்திய | 38,977 | 27,838 | 71.42 | 918 | 2.36 |
| 06 | வடமத்திய | 19,455 | 13,625 | 70.03 | 628 | 3.23 |
| 07 | ஊவா | 19,471 | 13,573 | 69.71 | 500 | 2.57 |
| 08 | கிழக்கு | 24,280 | 16,452 | 67.76 | 748 | 3.08 |
| 09 | வடக்கு | 17,999 | 11,901 | 66.12 | 623 | 3.46 |
| | தீவுமுழுவதும் | 298,812 | 216,815 | 73.05 | 7,308 | 2.46 |

| மாகாணம் (2018) | | 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி | | சகல பாடத்திலும் சித்தி பெறாதவர்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | எண் | வீதம் | எண் | வீதம் |
| 01 | தெற்கு | 36,720 | 29,532 | 80.42 | 409 | 1.11 |
| 02 | வடமேற்கு | 34,564 | 26,599 | 76.96 | 541 | 1.57 |
| 03 | மேற்கு | 78,071 | 59,858 | 76.67 | 1595 | 2.04 |
| 04 | சப்ரகமுவ | 27,294 | 20,784 | 76.15 | 558 | 2.04 |
| 05 | வடமத்திய | 19,395 | 14,116 | 72.78 | 497 | 2.56 |
| 06 | ஊவா | 19,679 | 14,245 | 72.39 | 474 | 2.41 |
| 07 | மத்திய | 39,625 | 28,680 | 72.38 | 894 | 2.26 |
| 08 | வடக்கு | 16,659 | 11,660 | 69.99 | 425 | 2.55 |
| 09 | கிழக்கு | 24,022 | 16,807 | 69.97 | 524 | 2.18 |
| | தீவுமுழுவதும் | 296,029 | 222,281 | 75.09 | 5917 | 2.00 |

ஆதாரம்- பரீட்சைத் திணைக்களம் அறிக்கை- 2018

அட்டவணை II இல் 2017, 2018 க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபெறுகள் மாகாண மட்டத்தில் தரப்பட்டுள்ளன.

**க.பொ.த (சா/த) பரீட்சை 2017-2018 மாகாண் மட்டத்தில் பாடசாலைப்பரீட்சார்த்திகளின் அடைவு மட்டம் (முதன் முறை)**

2017,2018 பரீட்சை அடைவு மட்டங்களை நோக்குமிடத்து முதல் 4 இடங்களிலும் மாற்றம் இடம் பெறவில்லை. 2017 இல் 6ஆம் இடத்தில் இருந்த வட மத்திய மாகாணமே 2018 இல் 5ஆம் இடத்திற்கும் 2017 இல் 7ஆம் இடத்தில் இருந்த ஊவா மாகாணம் 2018 இல் 6 ஆம் இடத்திற்கும் 2017 இல் 5 ஆம் இடத்தில் இருந்த மத்திய மாகாணம் 2018 இல் 7 ஆம் இடத்திற்கும் 2017 இல் 9 ஆவது இடத்தில் இருந்த வட மாகாணம் 8 ஆம் இடத்திற்கும் 8 ஆம் இடத்தில் இருந்த கிழக்கு மாகாணம் 9 ஆவது இடத்திற்கும் இடம் மாறியுள்ளன.

தமிழ்மொழி மூலம் கற்கும் மாணவர்களின் அடைவு பொதுவில் குறைவாக இருப்பதால் தமிழ்மொழி மாணவர்களை குறிப்பிடத்தக்க தொகையை கொண்ட மாகாணங்களின் அடைவுகள் குறைவாக இருப்பதனைக் காணலாம்.


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

மத்திய மாகாணத்தின் பின் நிலைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

தென் மாகாணத்தின் முதல் நிலைக்கு தமிழ் மொழி மூல மாணவர்கள் மிக மிக குறைவாக இருப்பதும் காரணங்களில் ஒன்றாகும். 2017, 2018 க்கு இடைப்பட்ட ஒரு வருட காலத்தில் மாகாண, மாவட்ட அடைவு மட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை அவதானிக்கலாம்.

மாகாண மட்ட க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கின் மாகாணங் கள் யாவற்றின தும் அடைவு மட்டங்கள் 2015 இல் இருந்து அதிகரித்து வந்துள்ளதைக் காணலாம். தென் மாகாணத்தில் 2015 இல் க.பொ.த. (உ/த) கற்க 75.21 வீதமாக இருந்த நிலை 2018 இல் 80.42 வீதமாக அதிகரித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் 2015 இல் க.பொ.த. (உ/த) கற்க 60.38 வீதமாக இருந்த தகுதி நிலை 2018 இல் 69.99 வீதமாக அதிகரித்துள்ளது.

வடமாகாணத்தின் அதிகரிப்பு 9.61 வீதமாக இருப்பதுடன் இவ்விடைப்பட்ட காலத்தில் வடமாகாணமே கூடுதலான அதிகரிப்பைக் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(திங்கள் தொடரும்)

| அட்டவணை I விபரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | சகல பாடசாலை பரீட்சார்த்திகள் | | தனியான பரீட்சார்த்திகள் | | சகல பரீட்சார்த்திகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்கம் | வீதம் | இலக்கம் | வீதம் | இலக்கம் | வீதம் | இலக்கம் | வீதம் |
| தோற்றியோர் எண்ணிக்கை | 296,192 | 97.6 | 379,055 | 89.59 | 139,129 | 59.48 | 518,184 | 78.87 |
| 5 பாடங்களுக்கும் அதற்கு மேல் தோற்றியோர் எண்ணிக்கை | 296,029 | 99.94 | 308,843 | 81.48 | 19,621 | 14.10 | 328,464 | 63.39 |
| உயர்தரத்திற்கு தகுதி பெற்றோர் | 222,281 | 75.09 | 226,417 | 73.31 | 8956 | 45.64 | 235,373 | 71.66 |
| 9 ஏ பெற்றவர்கள் | 9261 | 3.13 | 9266 | 3.00 | 147 | 0.75 | 9413 | 2.87 |
| எல்லாப் பாடங்களிலும் சித்தி பெறாதவர்கள் (ஆறு பாடங்களுக்கும் அதற்கு மேலாக பாடங்களுக்கு தோற்றியோர்) | 5917 | 2.00 | 6195 | 1.63 | 683 | 0.49 | 6878 | 1.33 |

க.பொ.த (சா/த) பரீட்சை-2018 பரீட்சார்த்திகளின் அடைவு ஆதாரம் - பரீட்சை திணைக்கள அறிக்கை 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோனியா!



மகாத்மா காந்தி குட்டிப் பிள்ளையாக இருக்கும் போது, விளையாடுவதில் பிரியம் அதிகம். எனவே, அவர் தன்னுடைய சகோதரர்களுடன் சேர்ந்து விளையாடுவார். காந்திஜியை அவருடைய பெற்றோர் "மோனியா' என்று செல்லமாக அழைப்பர்.

காந்திஜி தன் சகோதரர்களுடன் சிறு குழந்தைகள் விளையாடும் சாதாரண விளையாட்டுக்களான ஓடிப் பிடித்து விளையாடுதல், ஒளிந்திருந்து விளையாடுதல், மரத்தில் ஏறி விளையாடுதல் ஆகிய விளையாட்டுக்களையே பெரும்பாலும் விளையாடுவார். அவர் அப்படிச் செய்யும்போது மிகவும் உற்சாகமாகக் காணப்படுவார். அவர் சகோதரர்களுக்கும் காந்தி வந்துவிட்டாலே உற்சாகம்தான். ஏனென்றால், காந்தி சோனியாக இருந்தார். எனவே, அவரைக் கீழே தள்ளிவிடுவதும் அடித்து விளையாடுவதும் அவரை அழச் செய்வதிலும் பிரியம் அதிகம். விளையாட்டு என்றால் எல்லாமும்தான் இருக்கும் என்று காந்திஜி கருதியதால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை.

ஒரு நாள் காந்திஜி விளையாடும் போது மரம் ஒன்றில் ஏறிக் கொண்டார். அவரைத் தேடி வந்த சகோதரன், அவர் ஒளிந்து கொண்டிருந்த இடத்தைக் கண்டு பிடித்தவுடன் உற்சாகத்துடன், "இதோ மோனியா, அவனைக் கண்டுபிடித்துவிட்டேன் அவன் அவுட்!" என்று கூறிக் கொண்டே காந்திஜியின் கையைப் பிடித்து இழுத்துக் கீழே போட்டு விட்டார். உடனே மற்றவர்கள், "மோனியா அவுட்டாகி விட்டானா, எப்போதும் இந்தப் பயல்தான் முதலில் அவுட்டாவான்" என்று கூறியவாறே நாலு மொக்கு மொக்கிவிட்டு, எங்களைக் கண்டுபிடிடா பார்க்கலாம் என்று ஓடி ஒளிந்தனர்.

அன்று காந்திஜி மரத்திலிருந்து கீழே விழுந்ததால் உடலெல்லாம் நல்ல அடி. அத்துடன் மற்றவர்கள் உதைத்து விட்டுச் சென்ற உதைகளும் சேர்ந்து கொள்ள வலியினால் துடித்தார். அவர் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. மோனியா, ஆட்டத்துக்கு வருகிறாயா? இல்லையா? என்று குரல் கொடுத்தனர் மற்றச் சிறுவர்கள். ஒருவாறு வலியைச் சமாளித்துக் கொண்டு மீண்டும் ஆட்டத்தைத் தொடர்ந்தார். இப்படி ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல காந்திஜி விளையாடும் நாளில் எல்லாம் நிகழ்ந்தது.

"இப்படி இவர்கள் நம்மைத் தள்ளிவிட்டார்களே, அடித்து உதைத்து விட்டார்களே! பதிலுக்கு நாமும் ஒரு நாள் இவர்களை இப்படிச் செய்ய வேண்டும்! வலி என்றால் என்ன என்று உணரச் செய்ய வேண்டும் என்றெல்லாம் பழி உணர்ச்சி காந்திஜியிடம் இல்லை. எப்போதுமே காந்திஜி அடிபடுபவராக இருப்பாரே தவிர, அடி கொடுப்பவராக இருக்க மாட்டார். அம்மாதிரி வாய்ப்பு வந்தால்கூட அவர் அவர்களை அடிக்கமாட்டார். மனம் நோக பேசமாட்டார்.

ஆனால், எல்லாவற்றையும் தன் அன்னையிடம் சென்று ஒன்றுவிடாமல் கூறி வருந்துவார். "என் சகோதரர்கள் வேண்டுமென்றே இப்படிச் செய்கின்றனர்" என்று கூறுவார். இதைக் கேட்ட அத்தாயுள்ளம் பரிதவிக்கும்.

"இச்சிறுவன் ஏன் இப்படி இருக்கிறான். எல்லாக் குழந்தைகளும் தம்மை அடித்தவனைத் திருப்பித் தாக்கிவிட்டு, தம் அன்னையிடம் சென்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி அத்தாய்க்கும் அடிபட்டவனுடைய தாய்க்கும் பெரும் சண்டையை மூட்டிவிட்டுவிடும்.

இவனோ, எதுவொன்றும் செய்யாமல் மண்ணாக அங்கே நின்றுவிட்டு தன்னிடம் வந்து புகார் கூறுகின்றானே' என்று ஆதங்கப்பட்டாள். பின்னர் மகனை அழைத்து, "மகனே மோனியா! நீ சாதுவாக இருப்பதால்தான் அவர்கள் உன்னை அடிக்கிறார்கள்! யார் உன்னை அடித்தது அண்ணன் தானே!

அவன் உன்னை விட ஒன்றிரண்டு வயதுதானே மூத்தவன். அவனை உன்னால் அடிக்க முடியாதா? உன் அண்ணன் அநாவசியமாக உன்னை அடித்தான் என்றால் நீயும் அவனைத் திருப்பியடிக்க வேண்டியதுதானே! என்னிடம் வந்து சொல்லுவதை விட நீயே உங்கள் விளையாட்டில் இப்படிச் செய்து கொள்வதுதானே நியாயம்!" என்று கூறினார்.

"அம்மா, அவன் தான் பெரியவன். என்னை அடித்துவிட்டான். அவன் அடித்துவிட்டான் என்ற உண்மையைச் சொன்னதற்கு காரணம் என்னவென்றால், உடம்பிலே ஏது இந்தக் காயம் என்று நீ கேட்டாய்" அதற்காக சொன்னேன். அண்ணன் என்னை அடித்து விட்டான் என்று நான் உன்னிடம் கூறினால், நீ அவனை ஏன் நான் அடிக்கவில்லை என்று கேட்கிறாய். நீ என் அம்மா, நீயே எனக்குப் பிறரை அடி என்று கற்றுக் கொடுக்கலாமா? அவன் என்னை விட வயதில் பெரியவன். ஆகவே அடித்தான். நான் அவனை விட இளையவன். அடிவாங்கினேன். அவ்வளவுதான். என் அண்ணனை நான் ஏன் அடிக்க வேண்டும் என்று சொல்கிறாய்?" என்று திருப்பிக் கேள்வி கேட்டார்.

"மோனியா, மோனியா, நீங்கள் இருவரும் சகோதரர்கள். அதிலும் சிறுவர்கள். எனவே, நீங்கள் அடித்துக் கொள்வதில் ஒன்றும் தவறு இல்லையே" என்று கூறினார்.

"அம்மா, அண்ணன் என்னைவிட வயதில் மூத்தவன். ஆகையினால் அவன் என்னை அடித்தால் தவறு இல்லை. ஆனால், நான் அவன் தம்பி, நான் திருப்பி அடிக்கக் கூடாது. அது தவறு. நீ நியாயமாக என்ன சொல்ல வேண்டும்?

"நீ என்னிடம் திருப்பி அடி என்று சொல்வதற்குப் பதிலாக, அண்ணனை அழைத்து இனிமேல் தம்பியை அடிக்கக் கூடாது என்று சொல்லக் கூடாதா?" என்று கேட்டார். இதைக் கேட்ட காந்திஜியின் அன்னை அவருடைய சாத்வீக குணத்தை கண்டு பெருமையடைந்தார்.




## அறிந்து கொள்வோம்

- 'பிரமிடு கோவில் நாடு' என்று அழைக்கப்படுவது, பர்மா.
- இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர், முசோலினி.
- சுமத்ரா தீவில் மலரும் ராப்லிசியா ஆர்னல்டை எனும் பூ தான், உலகிலேயே மிகப்பெரிய பூவாகும்.
- ஒவ்வொரு மனிதனுக்கும் சுமார் 11/2 கிலோ எடையுடைய மூளை உள்ளது.
- கல்சியம் கார்பனேட் என்ற இரசாயனப்பொடியைக் கட்டியாக்கி சாக்பீஸ் தயாரிக்கப்படுகிறது.
- உடலை குளிர்விப்பதற்காக முன்னங்காலை நக்கும் பழக்கம் கங்காருகளுக்கு உண்டு.

### பொது அறிவு துணுக்குகள்

- 25 ஆயிரம் பூச்சிகள், உண்ணிகள், சிலந்திகளுக்கு ஒரே ஒரு கிறிஸ்துமஸ் மரமே இடம் கொடுக்க முடியும்!
- காலபோகஸ் தீவில் இருக்கும் ஒரு ஆமை இனம் 200 ஆண்டுகளுக்கும்மேலாக வாழும்.
- இதுவரை அறியப்பட்டதில் ஒரே முட்டையில் 9 மஞ்சள் கருக்கள் வரை இருந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் துன்பத்தை தன் துன்பம் போல எண்ணினால் வரலாற்றில் ஒரு தலைவன் உருவாகுவான்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விபத்து மரணத்துக்கான பாவ பழி யாரைச் சேரும்

வடக்குக் கிழக்கில் யுத்தம் நடந்தபோது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் போல இப்போது விபத்து மரணங்கள் உள்ளன.

விபத்து மரணங்கள் இல்லாத நாட்களே இல்லை என்று கூறுமளவுக்கு நாளாந்தம் நடக்கின்ற விபத்துக்கள் சர்வசாதாரணமாகி விட்டன.

கடந்த 17ஆம் திகதி மகியங்கனையில் இடம்பெற்ற விபத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்கள் பத்துப் பேர் பலியாகினர் என்ற செய்தி ஜீரணிக்க முடியாதது.

ஏன்தான் இப்படி என்று ஏங்கித் துடிப்பதைத் தவிர வேறு வழியும் தெரியவில்லை.

போக்குவரத்துப் பொலிஸாரின் முழு நோக்கமும் இலஞ்சம் வாங்குவது என்றாகிவிட்டது.

எங்கு இலஞ்சம் வாங்கக்கூடியதான சந்தர்ப்பங்கள் உள்ளனவோ அந்த இடங்களில் மட்டுமே போக்குவரத்துப் பொலிஸார் காத்து நின்று இலஞ்சத் தூண்டில் போடுகின்றனர்.

எனவே போக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கைகள் விபத்து மரணங்களை ஒரு போதும் தடுக்காது என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணத்துக்கான பாவ பழி போக்குவரத்துப் பொலிஸாரையே சாரும்.

இதை நாம் கூறும்போது தனித்து போக்குவரத்துப் பொலிஸாரை மட்டுமா? சாரும் என்றால், இல்லை. சரியானதும் முறையானதுமான சாரத்தியப் பயிற்சியை வழங்காத சாரத்தியப் பயிற்சி நிலையங்கள், உரிய சாரத்தியப் பயிற்சி இல்லாத போதிலும் இலஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குச் சிபார்சு செய்கின்ற பரீட்சகர் என்போருக்கும் விபத்து மரணங்களின் பாவ பழிகள் போய்ச் சேரும்.

இதை நாம் கூறும்போது, அப்படியா! என்று யாரும் ஆறுதல் அடைய வேண்டாம்.

இலஞ்சம் பெறுகின்ற சாரத்தியப் பரீட்சகர்களை மேற்பார்வை செய்யாத அதிகாரிகள், வீதிகளில் பொறுப்பற்ற முறையில் வாகனம் செலுத்துவோர், சதா தொலைபேசி கதைத்தபடி வாகனம் செலுத்தும் சாரதிகள் என யாரெல்லாம் விபத்து ஏற்படக் காரணமாக இருக்கின்றார்களோ அவர்கள் எல்லோருக்கும் விபத்து மரணத்துக்குரிய பாவ பழிகள் போய்ச் சேரும்.

சரி, பாவ பழி போய்ச் சேரும் என்பது ஆறுதலா? என்றால் இல்லை, விபத்துக்கள் தொடராமல் தடுக்கின்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதற்கு ஒரே வழி; வாகனத்தை வேகமாகச் செலுத்துகின்றவர்கள், கையடக்கத் தொலைபேசியில் உரையாடியபடி வாகனம் செலுத்துவோர், போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாமல் கண்டபாட்டில் வாகனம் ஓட்டுவோர் என விபத்தை ஏற்படுத்தக் கூடியவர்களை உடனுக்குடன் கண்டறிவதற்காக போக்குவரத்தைக் கண்காணிக்கும் கமராக்களை பொருத்துவதே ஒரே வழியாகும்.

இதனை வடக்கு கிழக்கில் முதலில் ஆரம்பிக்க வேண்டும். இதற்காக உலக நாடுகளிடம் உதவி கேட்பது பொருத்தமானது.

இவ்வாறான கண்காணிப்புக் கமராக்கள் வந்துவிட்டால், விபத்து மரணங்கள் கணிசமாகக் குறைவடையும் என்பது சத்தியம்.

# முல்லை., கள்ளப்பாட்டில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக்கரை பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட 25 அகவையுடைய இளைஞன் ஒருவர் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கள்ளப்பாடு தீர்த்தக் கரைப்பகுதியில் கஞ்சா வியாபாரம் இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக இரவு வேளை சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது குறித்த சந்தேகநபரிடம் இருந்து கஞ்சாவினை விலைக்கு வாங்குவதுபோல பாசாங்கு செய்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர் அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவர் தங்கி இருந்த வீட்டில் இருந்து 80 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப படுத்தியபோது அவரை எதிர் வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-281)

# சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் குறைகேள் கலந்துரையாடல்

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மக்கள் குறைகேள் கலந்துரையாடல் வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் திரிலோகநாதன் தலைமையில் சித்தன்கேணியில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ரஜீவ் கலந்து கொண்டு மக்கள் குறைகளைக் கேட்டறிந்தார். (ம-3)

# பேருந்தைக் கடத்தி பயணிகள் சுட்டுக்கொலை

## பாகிஸ்தானில் சம்பவம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் பேருந்தொன்று கடத்தப்பட்டு அதில் பயணித்த 14 பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இரு பயணிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

கராச்சியிலிருந்து கவதாருக்கு பயணித்த குறித்த பேருந்து நேற்று வியாழக் கிழமை அதிகாலை முதல் காணாமல் போனது.

இந்நிலையில், குறித்த பேருந்தை கடத்திய துப்பாக்கிதாரிகள் 14 பயணிகளை சுட்டுக் கொன்றுள்ளதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் எந்த அடிப்படையில் பயணிகளை தெரிவு செய்தார்கள் என்ற விடயம் இதுவரை வெளியாகவில்லை.

துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்கள் துணை இராணுவப் படையினரைப் போல சீருடையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச்சென்ற இரு பயணிகளும் பாதுகாப்பு சோதனைச் சாவடியில் சரணடைந்தனர். அங்கிருந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இது மிகவும் வெறுக்கத்தக்க செயலென தெரிவித்துள்ள மாகாண உள்துறை அமைச்சர மிர்சியா லங்கோவ், தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை ஒழிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவத்திற்கு பிரதமர் இம்ரான் கான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உன் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டாம்

ஒரு தவறைத் திருத்த விரும்பும்போது அது நான் செய்கிறேன் என்ற உணர்ச்சியைத் தருகிறது. அதுதான் தவறுகளுக்கு அடித்தளமாகிறது. பெரும்பாலும் தவறுகளைத் திருத்த முயலுபவர்கள் மேலும் மேலும் தவறுகளில் சிக்கிக் கொள்கிறார்கள். தம் தவறுகளைத் தாமே உணர்பவர்கள் அவற்றிலிருந்து விடுபடுகிறார்கள்.

நாம் பெரும்பாலும் ஒரு தவறை ஒப்புக்கொள்ளும் போது அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் நயாயம கறபககு முயலுகிறோம. சில வேளைகளில நாம தவறு செய்திருக்கிறோம் என ஏற்றுக்கொள்ளும் போதும் நியாயம் கற்பிக்கிறோம் அல்லது குறை உணர்வு கொள்கிறோம். ஒருவன் தன்னுடைய விவேகத்தினாலோ வேதனையினாலோ துன்புறுத்தப்படும்போது தவறுகளிலிருந்து விடுபட்டு விடுகிறான்.

எநதச செயலிலும சூழநிலையிலும தனமனதனடததிலும் தவறுகள் இருக்கலாம். ஒரு பூவைக் கையாளுவதைப் போல ஒரு தவறைக் கையாளு. காலப்போக்கில் மலர் எப்படி உதிர்ந்து விடவேண்டுமோ அதைப்போல் தவறுகளும் அகன்று விடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் சிலாவத்துறையில் 376 சங்குகளுடன் ஒருவர் கைது

மன்னார் சிலாவத்துறை பிரதேசத்தில் மன்னார் குற்றத்தடுப்பு பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது 376 சங்குகளை தம் வசம் வைத்திருந்த சந்தேக நபரொருவர் நேற்று முன் தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சிலாவத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரிடமிருந்து 50 மில்லி மீற்றரை விடவும் குறைவான நீளமுடைய சங்குகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

அவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை பொலிஸாரிடம் ஒபபடைக்கப்பட்டுள்ளன. (ம-3)

# கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய சித்திரைப் புதுவருட விழா-2019

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் சித்திரைப புதுவருட விழா - 2019, வள்ளல் மணி அமரர் மண்டலம் சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்த நினைவு தினம் என்பன ஜெயச்சந்திரன் கலையரங்கில் நாளை 20ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு கணேசன் திருமாலழகன் தலைமையில் இடமபெறும.

இதில் பிரதம விருந்தினராக மணிவிழா நாயகன் ஓய்வு நிலை ஆசிரியர் இராசையா கருணாகரன் கலந்து கொள்வார்.

நிகழ்வுகளாக க.பொ.த. (சா/த) 2018 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, சிறுவர் நிகழ்வுகள், கவியரங்கு, நற்சிந்தனை, பாரம்பரிய விளையாட்டு நிகழ்வின் சில காட்சிகள், "ஞாபகம் வருதே" நகைச்சுவைக் கதம்பம், இசை நிகழ்வு என்பன இடம் பெறும். (இ)

# இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

முற்கவர் என்ற முனிவர் இருந்தார். அவருக்கு மனைவியும் மகனும் மருமகளும் இருந்தார்கள். அவர் காட்டில் உதிர்ந்த தானியங்களைப் பொறுக்கி எடுத்து வைப்பார்.

அமாவாசை, பௌர்ணமி என்ற இரு நாட்களிலும் மட்டும் உண்ணும் விரதம் பூண்டவர்கள் அமாவாசை அன்று தானியத்தை மாவாக்கி நால்வரும் உண்ணத் தொடங்கும் போது ஓர் விருந்தினர் வந்தார். 15 நாள் பட்டினி கிடந்த முற்கவர் தனக்குள்ள அரிசி மாவைத் தந்தார். அதனை உண்டு திருப்தியடையாத விருந்தினருக்கு அவர் மனைவியும் தந்தாள். அதனாலும் நிறைவு பெறாத அவருக்கு மகனும் மருமகளும் தம் பங்கு மாவை வழங்கினார்கள்.

அடுத்த பௌர்ணமியில் உண்ணப் போகும் வேளையிலே அதே விருந்தினர் வந்தார். அடப்பாவி இன்றும் வந்தனையா என்று எண்ணாமல் முன்னையிலும் பன்மடங்கு அகமும் முகமும் மலர்ந்து நால்வரும் மானை வழங்கினார்கள். இவ்வாறு ஐந்து முறை வந்தார். ஐந்தாவது முறையும் அவர்கள் சிறிதும் வருந்தாது வழங்கினார்கள். விருந்தினர் அறக்கடவுளாகக் காட்சியளித்து அந்த நால்வருக்கும் பரகதி வழங்கினார். இந்த வரலாறு மகாபாரதத்தில் வருகின்றது. எனவே உபவாசம் இருப்பவர்க்கு மனம் இறுகிவிடும் என்ற கருத்து பிழையானது.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஜாதக தோசம் நீங்க எந்தெந்த தெய்வத்தை வணங்க வேண்டும்?

**சனி**

ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தோடு சனி இருக்கும் பட்சத்தில் அவர்கள் வெங்கடாஜலபதியை வணங்க வேண்டும். அதோடு தினமும் "கோவிந்தா, ராமதாச ஆஞ்சநேய, அனுமன், நரசிம்மர் - யோக நரசிம்மம் சரணம் பிர பத்யே, சாஸ்தா - ஓம் தர்மசாஸ்தாவே சரணம்" என்ற மநதிரததை ஜெபபபதன பயனாக ஜாதக தோஷஙகள விலகும்.

**ராகு**

ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தோடு ராகு இருக்கும் பட்சத்தில் அவர்கள் துர்கை அம்மனை வணங்க வேண்டும். அதோடு தினமும் "ஓம் துர்கா தேவியே போற்றி " என்ற மந்திரத்தை ஜெபிப்பதன் பயனாக ஜாதக தோஷங்கள் விலகும்.

**கேது**

ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தோடு கேது இருக்கும் பட்சத்தில் அவர்கள் விநாயகரை வணங்க வேண்டும். அதோடு தினமும் "ஓம் சக்தி விநாயக நமஹ" என்ற மந்திரத்தை ஜெபிப்பதன் பயனாக ஜாதக தோஷங்கள் விலகும். (முற்றும்)

# கார்மேல் போய்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனாகியது யாழ்.நோ நேம்







மாபெரும் பலம் பொருந்திய கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தினை வீழ்த்தி அபாரமாக வெற்றி பெற்று யாழ்.நோ நேம் அணி சம்பியன் ஆக மகுடம் சூடியது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கொம்மந்தறை இளைஞர் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்திய 6 பேர் 5 ஓவர் கொண்ட மென்பந்து சுற்று இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் நோ நேம் அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவரில் துடுப்பெடுத்தாடி 58 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய நர்மிதன்-25 ஓட்டங்களையும் கண்ணா-26 ஓட்டங்களையும் அணி சார்பாக பெற்றனர்.

59 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழகம் நோ நேம் அணி வீரன் நர்மிதனின் துள்ளியமான பந்து வீச்சினால் 3.1 ஓவர்களில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதில் ரகீம் அதிகபட்சமாக 20 ஓட்டங்களை அணி சார்பாக பெற்றார். பந்துவீச்சில் நர்மிதன் ஒரு ஓவர் வீசி 2 விக்கெட்டுக்களையும் கண்ணா, வினோயன், லது முறையே தல ஒரு விக்கெட்டுக்களை கைப்பற்ற நோ நேம் விளையாட்டுக்கழகம் 27 ஓட்டங்களால் அபாரமாக வெற்றி பெற்று மகுடம் சூடியது.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக நோ நேம் அணியின் கண்ணாவும் ஆட்டநாயகனாக நர்மிதனும் சிறந்த பந்துவீச்சாளர்-நர்மிதனும் தெரிவு செய்யப்பட்டதுடன் தொடர் நாயகன் கார்மேல் போய்ஸ் அணியின்அயன்தெரிவு செய்யப்பட்டார். (க)

# ஞானவைரவர் ச.ச.நிலையத்தின் வலைப்பந்தாட்டத் தொடர்

வல்வெட்டித்துறை ஞானவைரவர் சனசமூக நிலையம் நடத்தும் 16 வயதிற்குட்பட்டோருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நெடியகாடு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக 077 394 6463 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட சவாரிச் சங்க அனுமதியுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்கு வலி.வடக்கு சவாரிவிடந்தையில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி இடம்பெறவுள்ளது!

வடமாகாண ரீதியான இப் போட்டியில் நான்கு பிரிவிலும் முதலிடம் பெறும் வெற்றியாளர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படவுள்ளதுடன் ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (க)

# தர்மகுலசிங்க ஞாபகார்த்த கிண்ணம் ஆனைக்கோட்டை யூனியன் வசமானது



அமரர். தர்மகுலசிங்க ஞாபகார்தமாக திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ் இறுதிப்போட்டியில் வதிரி சிறிமுருகன் அணியை வீழ்த்தி மகுடம் சூடியது ஆனைக் கோட்டை யூனியன் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வதிரி அணியினர் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தனர். அதனடிப்படையில் 6 ஓவர் முடிவில் 52 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் தாஸ் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் வதிரி சிறிமுருகன் அணி சார்பாக லெஸ்லி 2 இலக்குகளையும் தினேஸ் ஒரு இலக்கினையும் வீழ்த்தினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி 5.4 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது.

கனோஜன் 20 ஓட்டங்களையும் தினேஸ் 10 ஓட்டங்களையும் பெற்றனர். போட்டியின் ஆட்ட நாயகனாக தினேஸ் தெரிவு செய்யப்பட்டார். (க-60)

# டோனிக்கு காய்ச்சல் வந்தால் கார்த்திக்கை களமிறக்குங்கள்

## கவாஸ்கர்




டோனிக்கு ஒருவேளை காய்ச்சல் வந்தால் கார்த்திக்கின் திறமையை வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைக்கும் என்று கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை அணிக்கு டோனிக்கு மாற்று வீரராக 2019 உலகக் கோப்பைக்கு தினேஷ் கார்த்திக் தேர்வு செய்யப்பட்டுள்ளார். முன்னதாக ரிஷப் பன்ட் மற்றும் கார்த்திக் இடையே போட்டி நிலவி வந்தது.

இதில், அனுபவத்தை காரணம் காட்டி கார்த்திக்கிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கவாஸ்கர் "டோனிக்கு ஒருவேளை காய்ச்சல் வந்து விட்டால் கார்த்திக்கின் திறமை வெளிப்படுத்த முடியும்" என்று தெரிவித்துள்ளார். "ஒருநாள் காலையில் டோனி வந்து எனக்கு காய்ச்சல், என்னால் ஆட முடியாது என்று கூறினால் உங்களுக்கு சிறந்த விக்கெட் கீப்பர் தேவை அதை கார்த்திக் நிறைவு செய்வார்" என்றார். (க)

# வல்வை புளூஸ் அணி வெற்றி




லண்டன் வல்வை புளூஸ் நண்பர்களின் அனுசரணையுடன் வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டத் தொடர் தீருவில் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இரண்டாவது போட்டியான லண்டன் வல்வை புளூஸ் மற்றும் வதிரி பொம்மர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் வல்வை புளூஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரினை வெற்றியுடன் ஆரம்பித்தது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமண தேசிய சரணாலயத்தில்...

சிறுத்தை தாக்கியுள்ளது.

குமண தேசிய சரணாலயத்தின் நுழைவாயிலில் இருந்து சுமார் 7 கிலோமீட்டர் தொலைவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருக்கோவில் பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை எடுக்கச்சென்ற வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் ஜீப் சாரதியையும் சிறுத்தை தாக்கியுள்ளது.

இதன்போது காயமடைந்த சாரதி அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தை அடுத்து, குமண சரணாலயத்தின் பாகுரே பகுதிக்குள் சுற்றுலாப் பயணிகள் பிரவேசிக்க தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், சரணாலயத்தின் ஏனைய பகுதிகள் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்துவிடப்பட்டுள்ளதாக சரணாலயத்தின் நிர்வாக அதிகாரி சிறிரகுமார குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவரிடம் வினவிய போது, இத்தகைய பராமரிப்புப் பணிகளின்போது வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரி ஒருவர் வழமையாக கடமையில் ஈடுபடுத்தப் படுவார் என கூறினார்.

எனினும், இந்த சந்தர்ப்பத்தில் தவறு ஏதேனும் நிகழ்ந்துள்ளதா என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாக வனஜீவராசிகள் திணைக்கள உயர் அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## இந்தியாவில் நேற்று...

முதல்கட்ட பாராளுமன்ற தேர்தல் கடந்த 11ஆம் திகதி 91 தொகுதிகளுக்கு நடந்து முடிந்த நிலையில், இரண்டாம் கட்டமாக 12 மாநிலங்களில் 95 மக்களவை தொகுதிகளுக்கு நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

தமிழகத்தில் 38 பாராளுமன்ற தொகுதிகளுக்கும், 18 சட்டமன்ற தொகுதிகளுக்கும் புதுச்சேரியில் ஒரு பாராளுமன்ற தொகுதிக்கும், தட்டாஞ்சாவடி சட்டமன்ற தொகுதிக்கும் நேற்று தேர்தல் நடைபெற்றது.

அதேபோன்று, கர்நாடகா 14, மகாராஷ்டிரா 10, உத்தரபிரதேசம் 8, பீகார் 5, அசாம் 5, ஒடிசா 5, சத்தீஸ்கர் 3, காஷ்மீர் 2, மணிப்பூர் ஒரு தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. காலை 7.00 மணிக்கு அனைத்து தொகுதிகளிலும் வாக்குப்பதிவு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாடு முழுவதும் 7 கட்டங்களாக தேர்தல் நடத்தப்படும் நிலையில், பதிவாகும் வாக்குகள், எதிர்வரும் மே 23-ந் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## எந்த எல்லைக்கும்...

புத்தாண்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமக்கு செல்லவேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கின்றது. செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றது. ஆகையினாலே பேச்சுக்களையும் சந்திப்புக்களையும் குறைத்து அதிகளவில் வேலை செய்யவேண்டிய ஒரு கட்டாயம் எங்கள் மத்தியில் உள்ளது. இந்த புத்தாண்டிலே வடமாகாணம் ஒரு முன்மாதிரியான மாகாணமாக இருக்கவேண்டும் என்பதே எனது நோக்கமென்றும் குறிப்பிட்ட ஆளுநர், வடமாகாணத்தின் 28 பில்லியன் ரூபாய் வரவு செலவுத்திட்டத்தில் நான் கையொப்பமிட்டுள்ளதுடன் இந்த 28 பில்லியனில் நாங்கள் எவ்வளவு வடமாகாணத்திற்குள் உழைத்துக் கொள்ளப் போகின்றோம் என்பது கேள்விக் குறியாகவும் கவலைக்குரியதாகவும் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மாகாணத்தின் முழு வருமானத்தையும் எங்களுக்குள்ளேயே நாங்கள் உழைத்துக் கொள்ள முடியும். ஏனெனில் பொருளாதார சுதந்திரம் இல்லாத ஒரு சமுதாயம் அரசியல் சுதந்திரத்தை யோசிக்க முடியாது. ஆகையினாலே அடிப்படையாக எமது மக்கள் பொருளாதார சுதந்திரத்தை அடையக்கூடிய வழிமுறைகளை நாங்கள் தேட வேண்டியதுடன் அது எங்கள் ஒவ்வொருவருடைய கடமையாகவுள்ளது என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தேசத்தை கட்டியெழுப்பும் பணியிலே அரசியல் சின்னங்களையும் அரசியல் யாதார்த்தங்களையும் குறிக்கோள்களையும் ஒரே ஒரு முறையாவது பின்வைத்து இந்த மக்களை நிமிர்த்த செய்வதற்காக முன்வாருங்களென வடமாகாணத்தின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஆளுநர் அழைப்பு விடுத்தார். (ம-3)

## நிவாரணம் அதிகள...

நகரில் அமைந்துள்ள ஐ.நா நிலையத்தில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பில் நிதி வழங்கும் மாநாட்டில் இதனை குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் அது தொடர்பில் அரச, தனியார் தேசிய, சர்வதேச ரீதியான ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தெளிவுபடுத்தியுள்ளார். (ம-3)

## பலனில்லாமல் போனது...

யளிக்கின்றது என இந்திய பாடகி ஸ்ரீநிதி தெரிவித்தார்.

வவுனியா வர்த்தக சங்கம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நிதி சேகரிப்பதற்காக இன்று வெள்ளிக்கிழமை வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் ஒழுங்கமைத்துள்ள இசை நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வவுனியா வந்துள்ள நிலையில் நேற்று செய்தியாளர்களுடன் பேசும் போதே, இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இலங்கை கலைஞர்கள் கடின உழைப்பாளிகள். குறிப்பாக இந்தியாவை பொறுத்த வரை பாடகர்கள் உட்பட அனைத்து துறைகளிற்கும் வாய்ப்புக்கள் நிறைய உள்ளது. ஆனால் இலங்கையில் அது குறைவாகவுள்ளதுடன் இங்குள்ள கலைஞர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்வதற்கும், தங்களை நிலை நிறுத்திக்கொள்வதற்கும் கஷ்டப்படுகின்றனர்.

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிற்கு நான் முன்பு வந்திருக்கிறேன். அப்பொழுது இங்குள்ள கலைஞர்களின் திறமைகளை பார்த்திருக்கிறேன். இங்கு சிறந்த கலைஞர்கள் மட்டுமன்றி சிறந்த விளையாட்டு வீரர்களும் உள்ளார்கள். இங்குள்ள கலைஞர்கள் மிகவும் திறமையாக செயற்படுகின்றார்கள். எனவே இங்குள்ள ஊடகங்கள் அவர்களிற்கு ஒரு வாய்ப்பினை வழங்க வேண்டும். அனைவரும் அவர்களுக்காக கண்களை திறந்து பாருங்கள் என கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையில் நிறைய தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுடன் கலைஞர்களும் மக்களுடன் மக்களாக இருந்திருக்கிறார்கள். அப்பொழுது இந்தியர்கள் இம்மக்களிற்காக குரல் கொடுத்திருந்தோம். இவர்களை காப்பாற்றுவதற்காகவும் இவர்களை தூக்கி விடுவதற்காகவும் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இருந்தும் அது சில சமயங்களில் பயனில்லாமல் பயனற்றதாகவே போயுள்ளது என நினைக்கும் போது மிகவும் கவலையாக உள்ளது என தெரிவித்தார். (ம-3)

## வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவு...

வாக்குகளையும் பெற்று உறுதியான வெற்றியை எம்மால் பெற முடியும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணிக்குள் பல கருத்துக்கள் உள்ளன ஆனால் குழப்பம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிரதான நபர்கள் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மற்றும் ஜனாதிபதியின் நகர்வுகள் குறித்தும் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் நகர்வுகள் குறித்தும் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இப்போது கட்சிக்குள் குழப்பங்கள் நிலவுவதாக கூறும் கதைகள் அனைத்துமே பொய்யானவை. கட்சிக்குள் பல கருத்துக்கள் உள்ளன. ஐக்கிய தேசிய கட்சியாக சிலர் தமது நிலைப்பாட்டினை கூறுகின்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணியாக நாம் எமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகள் இடையில் பல கருத்துக்கள் நிலவுகின்றது. ஆகவே இவை அனைத்தையும் தாண்டி பொதுவான ஒரு நிலைப்பாட்டினை எம்மால் எட்ட முடியும். இப்போதும் அவ்வாறான நிலைப்பாடு ஒன்றினை நாம் எட்டியுள்ளோம்.

எவ்வாறு இருப்பினும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலே முதலில் இடம்பெறும் அந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெறும். இதில் சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகளின் ஆதரவில் வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவில் எம்மால் ஆட்சியை அமைக்க முடியும்.

சகல மக்களுக்குமான பொதுவான வேலைத்திட்டம் ஒன்றினை நாம் நல்லாட்சியில் முன்னெடுத்து வருகின்றோம். அதனை தொடர்ந்தும் முன்னெடுத்து ஆரோக்கியமான திசைக்கு நாட்டினை கொண்டு செல்வோம் என்றார். (ம-3)

## பலாலி விமான நிலையத்தை புன...

72 ஆசனங்களை கொண்ட விமானங்கள் சேவையில் ஈடுபடத்தக்கதாக விமான நிலையத்தை புனரமைப்பதென்றும், இந்திய தேர்தலின் பின்னர் அமையும் அரசுடன் பேசி, சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிக்கும் பணியை ஆரம்பிப்பதென்றும், பிரதமர் தலைமையில் நடந்த வடக்கு கிழக்கு துரித அபிவிருத்தி செயலணியில் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. ஜனாதிபதி தலைமையிலான வடக்கு கிழக்கு அபிவிருத்தி செயலணியிலும் இதேவிதமான உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

இராணுவம், விமானப்படை, சிவில் விமானசேவை அதிகாரிகளை உள்ளடக்கியதாக நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில், தற்போதுள்ள ஓடுதளத்திற்கு அண்மையாக உள்ள இரண்டு கட்டடங்களை, குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்கள செயற்பாடுகளிற்கு பாவிப்பதென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த கட்டடங்களை அடிப்படையாக வைத்தே, விமான நிலைய விஸ்தரிப்பு திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தற்போது அந்த கட்டடங்களை வழங்க பாதுகாப்பு தரப்பு மறுத்துள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் குறிப்பிட்டார். பாதுகாப்பு தரப்பின் நிலைப்பாடு இந்திய தூதரக அதிகாரிகளிற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விமான நிலைய பயன்பாட்டிற்கு தேவையான கட்டடங்களை மயிலிட்டி பக்கமாக அமைக்கும்படி பாதுகாப்பு தரப்பு குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார்.

விமான நிலைய புனரமைப்பு பணிகளை துரிதகதியில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதும், தற்போதைய புதிய நிலைமையினால் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-3)

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் நின்...

படும் ஒருவரே வெற்றிபெறுவார் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள நவசம சமாஜக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன கருத்து வெளியிடுகையில்,

சிங்களப் பேரினவாதத்தை மீண்டும் தூண்டிவிட்டு அதனூடாக வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகலாம் என்ற கனவு தற்போது நிறைவேறாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையுடைய ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினால் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையில் மகிந்தவாதி உறுப்பினர்கள் உள்ளனர். அதனால் நூதன துட்டகைமுனு ஒருவரை நிறுத்த திட்டமிட்டுள்ளனர். யுத்தத்தை முடித்தோம், நாட்டைப் பிரிக்கின்ற போராட்டத்தை அழித்தோம், அதனால் நாட்டைக் காப்பாற்றிய எங்களை வெற்றிபெறச் செய்யுங்கள் என்ற அடிப்படையில் வாக்குகளை கேட்கும் திட்டத்தில் அவர்கள் இருக்கின்றார்கள்.

அதற்காக யார் போட்டியிடுவது? மறுபக்கம் ஜனாதிபதி சிறிசேன மீண்டும் போட்டியிட எதிர்பார்க் கின் றார். கூட்டணிப் பேச்சுக்கள் நடத் தப்பட்டு வருகின்ற நிலையில் சிங்கள வாக்கு களைப் பெறும் ஒருவரை நிறுத்து வது பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை. ஆனால் சிங்கள பேரினவாதி ஒருவரை நிறுத்தினாலும் இன்று வெற்றிபெற முடியாத நிலை உருவாகியுள்ளது.

70 வீதம் சிங்கள மக்கள் உள்ளதோடு அதில் 5 வீதத்தினர் கிறிஸ்தவர்கள். 65 வீதமே துட்டகைமுனுவை அடிப்படையாகக் கொண்டு இனவாதத்தை தூண்டி ஏமாற்றக் கூடிய சிங்ளவர்கள் இருக்கின்றனர். அதனால் சிங்கள மக்களை மாத்திரம் நம்பி நிறுத்தப்படும் வேட்பாளர், தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளின்றி வெற்றிபெற வேண்டுமானால் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற வேண்டும். இது மிகவும் கடினமானதாக இருக்கும்.

கடந்தகால தேர்தல்களில் மகிந்த ராஜபக்ச தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளை இடைமறித்தே வெற்றிபெற்றார். இதனாலேயே இம்முறையும் மகிந்த தமிழர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்தி தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கச் செய்து சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றியை சுவீகரிக்க முயற்சிக்கின்றார்.

இன்றும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத கொள்கை கொண்ட சிலர், பிரிந்தே வாழ் வேண்டும் என்ற சிந்தனையுடன் இருக்கின்றனர். அப்படியான ஒருவர்தான் எனது நண்பரான சிவாஜிலிங்கம். அவர் இதற்கு முன்னரும் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுவதற்கு உதவியவர். தமிழ் மக்களின் வாக்குகளை திசை திருப்பி ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அதிகாரம் சென்றடைவதை தடுப்பதற்கு நினைக்கின்றார்.

அதற்காக வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை தேர்தலில் நிறுத்தவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இதனூடாக சர்வதேசத்தின் உதவியைப் பெற முடியும் என்றும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடிப் பதற்காக இந்தியாவும் - அமெரிக் காவுமே உதவியதை அவர்கள் மறந்து விட்டார்கள்.

தமிழ் மக்களின் நீதிக்காக அவர்க்ள் ஜெனீவாவில் குரல் கொடுத்தாலும் அமெரிக்காவும், இந்தியாவும் விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புப் பட்டியலில் சேர்த்து அழிக்க வேண்டும் என்று செயற்பட்டவர்கள். இன்றும் அவர்கள் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஆகவே விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டின் ஊடாக தமிழ் மக்களின் போராட்டத்தில் குறைந்த பட்சம் பிரிந்து செல்ல வேண்டும் என்று நினைத்தால் அது ஒருபோதும் சாத்தியப்படாத ஒன்றாகும்.

அதற்கு எதிராக செயற்பட்டவர்கள் தான் இந்தியாவும் அமெரிக்காவுமாகும். ஆகவே அப்படியான வேட்பாளர் ஒருவரை நிறுத்தி வாக்குகளை சிதறடிக்கச் செய்து முற்போக்கு வேட்பாளர் ஒருவரை தோற்கடிக்க முடியும் என்று நினைத்தால் அதுவும் சாத்தியப்படாது போலியான முயற்சியாகவே அமையும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயலவர்களுக்கு...

அத்துடன், அயல் வீட்டுப் பெண்கள் தாக்கியதில் காயமடைந்த தாயாரும் அவரது மகன், மகள் என மூவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நல்லூர், செம்மணி வீதியில் செட்டித்தெரு தோட்டம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

அதே இடத்தில் வசிக்கும் அயலவர்களுக்கு இடையே வளர்ப்பு நாயால் கடந்த வாரம் முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் நாய் வளர்க்கும் குடியிருப்பாளரின் மனைவி மற்றும் அவரது மகன், மகள் மூவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை ஒன்றுக்காகச் சென்றுவிட்டு நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியுள்ளனர்.

அவர்களை வீட்டு வாசலில் வைத்து இடைமறித்த அயல் வீட்டில் வசிக்கும் சிறுமி உள்ளிட்ட பெண்கள் மூவர் மற்றும் ஆண் ஒருவர் என நால்வர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாய் மற்றும் அவரது பிள்ளைகள் இருவரையும் கைகளாலும் கால்களாலும் பெண்கள் மூவரும் தாக்கினார்கள். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண நகரில் பணியிலிருந்த கணவருக்கு தாக்குதலுக்குள்ளான பெண் தகவல் வழங்கியுள்ளார்.

அதுதொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்த குடும்பத்தலைவர், பொலிஸாரையும் அழைத்துக் கொண்டு சம்பவ இடத்துக்குச் சென்றார். அங்கு தாக்குதலுக்குள்ளான பெண், அவரது பிள்ளைகள் இருவரையும் மீட்ட பொலிஸார், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்

அத்துடன், குடும்பத்தலைவரிடம் முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்டு தாக்குதல் நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சிறுமி உள்ளிட்ட பெண்கள் மூவர் மற்றும் ஆண் ஒருவரையும் கைது செய்துள்ளனர். அவர்கள் தாயாரும் மகள் என இரு பெண்களும் மற்றும் கணவன் மனைவி உறவுமுறை கொண்டவர்கள்.

சந்தேகநபர்கள் நால்வரையும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் பொலிஸார் நேற்று முற்படுத்தினர். சந்தேகநபர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் முன்னிலையானார். சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க பொலிஸார் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம், சந்தேகநபர்கள் மூவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், சிறுமியை அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையில் தங்க வைக்க உத்தரவிட்டார். (ம-101)

## 18 மாவட்டங்க...

டுள்ள தளம்பல் நிலை காரணமாக தற்போது காணப்படும் மழையுடனான வானிலை, பலத்த மின்னல் தாக்கம் தொடரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவ்வகையில், மன்னார், புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், மாத்தளை, கம்பஹா, கேகாலை, கண்டி, கொழும்பு, நுவரெலியா, பதுளை, மொனராகலை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் கவனஞ்செலுத்துமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்த பிரதேசங்களில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு செல்வதை தவிர்த்துக் கொள்வது சிறந்தது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## சிறப்புத் தேவையு...

ஊடாக நடவடிக்கை எடுத்து நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

கல்வி அமைச்சு, வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை அமைச்சு, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுக்கே இந்த கட்டளையை உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியது.

சிறப்புத் தேவையுடையவரான மருத்துவர் அஜித் பெரேரா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிரசன்ன ஜயவர்த்தன, விஜித் மல்கொட, முறுது பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய குழாமே இந்தக் கட்டளையை வழங்கியது.

அத்துடன், மனுதாரருக்கு வழக்குச் செலவாக 50 ஆயிரம் ரூபாய் பணம் வழங்கப்பட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-3)

## சஜித் - ரவிக்கு...

பகிரங்கமாக மோதிக் கொள்ள வேண்டாம் என அமைச்சர்களான சஜித் பிரேமதாசவிடமும், ரவி கருணாநாயக்கவிடமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டனத்துடன் கூடிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நுவரெலியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கட்சி உறுப்பினர்களிடையே கருத்து மோதல் ஏற்படுவது கட்சி இரண்டாக பிரிந்து விடுவதற்குரிய காரணம் அல்லவெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

## கட்சிக்குள் கருத்...

சந்தர்ப்பம் வரும்போது அனைவரும் ஒன்றுபடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார். (ம-3)


**வாடகைக்கு**

நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற 2 அறை வீடு, A/C, சமையலறை Parking வசதியுடன் குறுகிய கால வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 077 788 7360**

(8515)

**நீதிமன்ற MA, வடமாகாண வருமான பரிசோதகர் (RI), சமய பாட ஆசிரியர்**

பரீட்சைகளுக்கான பொது உளச்சார்பு மற்றும் மொழித்திறன் வகுப்புக்கள்

ஆரம்பம் 20.04.2019 9.30am

**கோலாசிற்றி**

234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 182 3534

(8513)

**FRENCH LANGUAGE CENTRE**



**பிரெஞ்ச்**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 20.04.19 சனி காலை 8 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 22.04.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1

IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(C-6059)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

வடமாகாண மற்றும் மத்திய அரச போட்டிப் பரீட்சைகளுக்கான அனைத்து வினாத் தாள்களுக்குமான வகுப்புக்கள் குறைந்த கட்டணத்துடன் தொடர்ச்சியாக உங்கள் வசதிக்கு ஏற்ற நேர ஒழுங்குகளுடன் நடைபெறுகின்றன.

**076 688 3394**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதியில்)

**கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்**



வீட்டு கையியக்க மெசின் | வர்த்தக கையியக்க மெசின் | வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

தொடர்புகளுக்கு : 076 796 6000 (இலங்கை), 4164336006 (ரொரன்ரோ கனடா)

www.StringhopperMachine.com

Email : mo@college.ca

(7939)

**கருத்தரங்கு தொடர் - 7**

**SLAS (Opn/Ltd)**

20.04.2019 சனிக்கிழமை 9am - 3pm நுண்ணறிவு, முகாமைத்துவ உளச்சார்பு, விடய ஆய்வு

**P.கமல்தாசன் (SLPS)**

**T.அமல்ராஜ் (SLAS)**

SLEAS, SLFS, LLB, பதிவாளர், எழுதுநர், வட மாகாண ஆசிரியர், சமய பாட ஆசிரியர், சிறைக்காவலர், வருமானப் பரிசோதகர் போட்டிப்பரீட்சைக்கானது

- கல்விப் பொது அறிவு **K.குமணன்** (SLPS)
- சட்டம் **S.பரணிதரன்** (SLPS, LLB)
- மொழித்திறன் **A.K.கீர்த்திராஜன்** (MA)

(C-6158)

**நாவலர் கல்வி நிறுவனம்** (ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்) 077 111 6739, 076 166 1986

**D.C.M யாழ்.நகர்**

(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)

**A/L 2021**

**கலை, வர்த்தக புதிய பிரிவுகள்**

ஆரம்பம் : 20.04.2019 சனிக்கிழமை

நேரம் : காலை - 9.00 மணியளவில்

**077 011 9434** - நிர்வாகி

(8506)

**விற்பனையாளர் தேவை**

வடமராட்சியில் இயங்கும் சிறிய வியாபார நிலையம் ஒன்றை உரிமையாளருடன் இணைந்து சிறப்பாக நடத்துவதற்கு முகாமைத்துவ விற்பனையாளர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு : 077 119 7241

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg

கனடா - 900 /=Kg

ஜேர்மனி - 700 /=Kg

நெதர்லாந்து - 700 /=Kg

(C-6066)

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELs

**வாகன கண்காணிப்பு கருவி**

உங்கள் வாகனத்தின் நடமாட்டங்களை இலகுவாக தொலைபேசி மூலம் அவதானிக்கலாம்.



Milage, Over Speed, Parking Report உண்டு.

இன்னும் பல வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:

**Jaffna - 077 444 5909**

(8508)

**காசி யாத்திரை**

ஆரம்பம் : 15.05.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10

**தரிசிக்கும் இடங்கள் :**

டெல்லி நாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா (தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்ம பூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்க எமது சேவை**

4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், 2 பேருக்கு வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

"சென்றவர்களைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"

கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்

59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11

077 768 0102 / 077 736 2154

Email : Sriranganathan2601@gmail.com

(C-6151)


**கண்ணீர் அஞ்சலி**



யாழ் D.C.M கல்வி நிறுவனத்தின் புவியியல் ஆசிரியர் P.S.V.தினேஸ் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

**சதாசிவம் விஜயகுமார்**

அவர்கள் 18.04.2019 வியாழக் கிழமை அமரத்துவமடைந்துள்ளார்.

அவரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**D.C.M சமூகம், யாழ்.நகர்.**

(8514)


**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு**

021 221 7603

021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org